THERMOS
தேமஸ் பிளாஸ்க்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.
கிடைக்குமிடம்:
நாபன்ஸ் ரேட்ஸ்
சேகரம் கட்டிடம்,
74, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 693

பக்கங்கள் 8 ★

ஈழநாடு EELANAADU

50 சதம்

மலர் 22 | சித்திரை 3 | ஜு-அவ் 28 | இதழ் 65
யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 15-4-80

பிறீலங்கா
இண்டஸ்ட்ரீஸ்
தயாரிப்பான
"லங்காசூம்"
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்
கிடைக்குமிடம்:
லெடன் ரேடேர்ஸ்
சேகரம் கட்டிடம்
188, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 693

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS LIBRARY
RECEIVED
1980-4-15
PERIODICALS DIVISION

# இந்திராகாந்தி மயிரிழையில் உயிர் தப்பினர்!

## கத்தி வீசிய இளைஞர் கைது!!

## மெய்காப்பாளர் காயம்; கொலைமுயற்சி முறியடிப்பு

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியைக் கொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி ஒன்றிலிருந்து அவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார் என்று புதுடில்லியிலிருந்து கிடைக்கப்பெற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

திருமதி காந்தியைக் கொலை செய்யும் நோக்குடன் சுமார் ஆறு அடி தூரத்திலிருந்து அவரை நோக்கி வீசப்பட்ட 5 அங்குல நீளமான 'ஸ்பிரிங்' கத்தி அவரது மெய்காப்பாளரைத் தாக்கியது.

இந்திய பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஹரிஜனத் தலைவர் டாக்டர் அம்பேத்காரின் 89 வது பிறந்தநாள் 'விழாவில் கலந்துகொண்டபின் காரில் ஏறவந்தபோது குஜராத் இளைஞர் ஒருவர் திருமதி காந்தி மீதுகத்தியை வீசினாராம்.

37 வயதான ராம்சந்த்லால் லாணி என்ற அந்த இளைஞர் பொலிசாரினால் மடக்கிப் பிடிக்கப்பட்டார் என்றும் புதுடில்லி செய்திகள் மேலும் தெரிவித்தன.

### தலைவர்கள் கண்டனம்

திருமதி காந்தியைக்கொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சிக்கு கட்சிவேறுபாடின்றி பல தலைவர்கள் கண்டனம் தெரிவித்தனர். (இ)

## ரயில் தடம்புரண்டதில் 1 நாள் சேவை பாதிப்பு

[மன்னார்]

கொழும்பு - தலைமன்னார் தபால் ரயில் பாதையைவிட்டு விலகியதால் ஒரு நாள் முழுவதும் ரயில் சேவை நடைபெறவில்லை.

கொழும்பில் இருந்து தலைமன்னார் நோக்கி வந்த இரவுத் தபால் ரயில், கடந்த வியாழக்கிழமை அதிகாலை மாதோட்டம் ரயில் நிலையத்தில் தரித்து விட்டுப் புறப்பட்டபோது இரண்டு பெட்டிகள் பாதையை விட்டு விலகிவிட்டது. இதனால் அன்றைய தபால் ரயில்சேவை மாதோட்டம் ரயில் நிலையத்துடன் நிறுத்தப்பட்டது.

இந்த ரயிலில்வந்த பிரயாணிகளில் அநேகர் இந்தியா செல்ல வந்த பிரயாணிகளாவர். இப்பிரயாணிகள் மாதோட்டம் ரயில் நிலையத்திலிருந்து பஸ்களிலும், தனியார் வாகனங்களிலும் தலைமன்னார்வந்து சேர்ந்தார்கள்.

ரயில்பெட்டிகள்தடம்புரண்டதால் ஒரு நாள் முழுவதும் ரயில் சேவைநடைபெறவில்லை. நிலைமை சீரடைந்ததும் மறுநாள் வெள்ளிக்கிழமை தொடக்கம் ரயில் சேவைகள் வழமைபோல் நடைபெற்றுவருகிறது. [கு]

யாழ். மாநகரசபை எல்லைக்குள்

## நெடுஞ்சாலைத் திணைக்கள வீதிகள் ஒன்பது மட்டுமே!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் உள்ள நெடுஞ்சாலை திணைக்களத்திற்குரிய 9 வீதிகளும் சிறந்த முறையில் திருத்தி செப்பனிடப்பட்டுள்ளதாக யாழ். நெடுஞ்சாலை திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ் மாகநரசபை எல்லைக்குள் இருந்து 9 வீதிகள் மட்டுமே நெடுஞ்சாலை திணைக்களத்திற்குரியதென்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

நெடுஞ்சாலை திணைக்களத்திற்குரிய விதிகள் யாவும் தகுந்த மேற்பார்வையில் சிறந்தமுறையில் செப்பனிடப்பட்டிருப்பதாகவும் இந்த வீதிகளில் ஒன்றுகூட, பொது மக்கள் குறைசொல்லக்கூடிய நிலையில் இல்லையென்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ் மாநகரசபை எல்லைக்குள் உள்ள நெடுஞ்சாலை திணைக்களத்திற்குரிய வீதிகள் வருமாறு.

1. யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி (வேம்படி சந்திக்கருகில் ஆரம்பித்து நல்லூர் ஊடாக செல்வது)

2. யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதி (பொலிஸ் நிலைய சந்தியில் ஆரம்பித்து, யாழ். தபால்நிலையத்திற்கு அருகாமையில் சென்று காங்கேசன்துறை நோக்கிச் செல்வது)

3. யாழ்ப்பாணம் காரைநகர் வீதி ஐந்து சந்தியில் இருந்து மானிப்பாய் வீதியால், ஓட்டுமடம் சென்று காரைநகர் செல்வது)

4. யாழ்ப்பாணம் - பலாலி வீதி (பருத்தித்துறை வீதியில் இருந்து பிரிந்து பலாலி நோக்கிச் செல்வது)

5. யாழ்ப்பாணம் - கண்டி வீதி (பொலிஸ்நிலைய சந்தியிலிருந்து செல்லும் பிரதான வீதி)

6. ஸ்ரான்லி வீதி (யாழ் புகையிரத பின்பக்கத்தில் இருந்து முட்டாஸ்கடை சந்திவரை)

7 யாழ். கடற்கரைவீதி (யாழ் பொலிஸ் விடுதி பின் பக்கத்தால் கடற்கரை ஓர

(8-ம் பக்கம் பார்க்க)

## கைவிசேஷம் வாங்குவதில் தகராறு மனைவி தற்கொலை!

(மாவிட்டபுரம்)

புத்தாண்டு தினத்தில் கைவிசேஷம் வழங்க கணவன் தாமதித்ததால் மனமுடைந்த மனைவி நஞ்சருந்தி மரணமானார்.

குரும்பசிட்டியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் நாகேஸ்வரி (30 வயது) என்பவரே மரணமானவராவர்.

இம்மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா விசாரணை நடத்திய சமயம், புத்தாண்டு தினத்தன்று பகல் 11 மணியளவில் மோட்டார் சைக்கிளில் காலமானவரை ஏற்றிச்சென்று குரும்பசிட்டி அம்மன் கோவிலில் விட்டுச்சென்ற அவரது கணவர் பின்னர் தாமதித்து வீடுவந்து சேர்ந்ததாகவும் அப்

(8-ம் பக்கம் பார்க்க)

பிரிட்டனில் கல்வி பயிலும்

## வெளிநாட்டு மாணவர் கட்டண அதிகரிப்பு: தட்சருடன் பேச்சுவார்த்தை

### பொதுநல அமைப்பு நாடுகள் முடிவு

லண்டன், ஏப். 14

பிரிட்டனில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்விக் கட்டணத்தை குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுநல அமைப்பு நாடுகள் நிறுவனம் பிரிட்டிஷ் அரசைக் கோரவுள்ளது.

பொதுநல அமைப்பு நாடுகளின் கூட்டம் ஒன்று அண்மையில் நடைபெற்றபோது பல உறுப்பினர்களின் கோரிக்கையின்பேரில் பிரிட்டிஷ் அரசுடன் தொடர்புகொண்டு இது குறித்து பேச்சு நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

பிரிட்டனில் கல்வி கற்பதற்கு பிரிட்டன் ... ஐரோப்பியநாடுகளை... மாணவர்கள் வருடாந்தம் ஆயிரம் ஸ்டேர்லிங் பவுணை மட்டுமே செலுத்தவேண்டிய அதேவேளையில், ஏனைய வெளிநாட்டு மாணவர்கள் 3 ஆயிரம் முதல் 4 ஆயிரம் பவுண்வரை வருடாந்தம் செலுத்தவேண்டியுள்ளது. இதனால் வெளிநாட்டு மாணவர்கள் பெரிதும்

(8-ம் பக்கம் பார்க்க)

## புத்தாண்டு தினம் அதிகாலை தாலிக்கொடி கொள்ளை!

(மாவிட்டபுரம்)

புத்தாண்டு தினத்தில் தமது தாலியை குடும்பப்பெண் ஒருவர் திருடர்களிடம் பறிகொடுத்துள்ளார்.

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த திருமதி தாமரைச் செல்வம் என்னும் பெண்மணியே இவ்வாறு தாலிக்கொடியைப் பறி கொடுத்தவராவார்.

புத்தாண்டு தினத்திற்கு முதல் நாள் சனிக்கிழமை இரவு கோவிலுக்குச் சென்று விட்டுவந்து வீட்டின் வெளி விறாந்தையில் இவர் படுத்திருந்ததாகவும் அதிகாலைவேளை அங்குவந்த திருடர்கள் அவரது கழுத்திலிருந்த சுமார் 14 ஆயிரம் ரூபாபெறுமதியான தாலிக்கொடியை ஓசைப்படாமல் கழற்றிக் கொண்டு ஓடியதாகவும், ஆளரவம் கேட்டு அவர் விழித்துக் கொள்ளவே திருடர்கள் ஓடியது தெரிந்ததாகவும் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறை பொலிஸைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் ஆர். ஜி. பீரிஸ். சார்ஜன்ட் தியாகராசா, கான்ஸ்டபிள்கள் விஜயரத்தினம், ஜீவராஜா ஆகியோர் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணை நடத்தி திருடர்கள் விட்டுச் சென்றுள்ளதாகக் கருதப்படும் சேர்ட் ஒன்றைக் கைப்பற்றியுள்ளனர்

இச்சேர்ட்மூலம் இத்திருட்டைத்துப்புத் துலக்க பொலிஸ் நாய் வரவழைக்கப்பட்டு விசாரணை நடபெற்று வருகிறது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய கார் றேடியோ கசற் ஸ்ரீறியோ (ஓட்டோ றீபிளே) ஓட்டோ ஏரியல் உட்பட மற்றும் பிலிப்ஸ் பொக்கற் றேடியோக்கள். S. சபாரட்ணம் 149, கண்டி வீதி, அரியாலை. 5470

புத்தம்புதிய டெக் இரண்டு பயினியர், பிலிப்ஸ் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். றேடியோமனுவல், யாழ்ப்பாணம். 5467

நன்கு பராமரிக்கப்பட்ட முதல் தரமான, பருவமுள்ள கொடிமுந்திரிகை கன்றுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. நா. ஜெயசிலன், இருபாலை றோட், கோண்டாவில், 5454

### தேவை

பிடவை வியாபாரத்தில் ஆகக் குறைந்தது 5 ஆண்டுகளுக்கு அனுபவம் உள்ள ஆண்கள் எமது விற்பனைப் பகுதிக்குத் தேவைப்படுகின்றனர். (Salesmen) நேரில் சமுகம் தருவது விரும்பத்தக்கது. க. நாகமுத்து அன் சன் 48-50 பெரிய கடை, யாழ்ப்பாணம். 5462

## "எனது தொகுதியில்

# சேவையாற்றுங்கள் அல்லது வெளியேறுக!"

## அரசு ஊழியருக்கு 'இராசு' கோரிக்கை

(மட்டக்களப்பு)

மக்களுக்குச் சிறந்த சேவை அளிக்க முடியாத அரசாங்க உத்தியோகத்தர்கள் எனது தொகுதியை விட்டு உடன் வெளியேறி விடுங்கள்.

மட்டக்களப்பு மண்முனை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டுரையாற்றிய மட்டக்களப்பு முதலாவது எம். பியும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

மட்டக்களப்பு பகுதியை முன்னேற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் தான் நாங்கள் செயல்படுகின்றோம்.

இங்குள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் சிலர் சிறந்த முறையில் செயல் படுவதில்லை. என்று நான் அறிகின்றேன். அவர்கள் சிறந்த முறையில் செயல்பட்டால் சிறிய பிரச்னைகளுக்குக் கூட பொது மக்கள் எங்களிடம் வரவேண்டிய நிலை தவிர்க்கப்படும். அரசாங்க உத்தியோகத்தர்கள் தங்கள் பிரச்னைகள் எதுவானாலும் என்னிடமோ அல்லது மட்டக்களப்பு மாவட்ட மந்திரி திரு. எம். கனகரத்தினத்திடமோ எடுத்துக் கூறும் பட்சத்தில் நாங்கள் தீர்த்து வைப்போம். உங்கள் பிரச்னை தீரவில்லை என்பதற்காக அபிவிருத்தியை தடை செய்ய முயலவேண்டாம். சிறந்த சேவை அளிக்கமுடியாவிட்டால் எனது பகுதியைவிட்டு வெளியேறிவிடுங்கள். சிங்களப் பகுதியில் நாட்டுப்பற்றுடன் ஆண்கள் பெண்கள் செயல் படுகிறார்கள். இப்பற்று நம்மிடையே ஏற்படவேண்டும்.

புயலின் பின்பு மட்டக்களப்பு அபிவிருத்தி அடையவில்லை என கண்ணீர்விடுகிறார்கள். சில அரசியல் வாதிகள். புயல் அடித்து 15 மாதங்கள் இவற்றில் முதல் - இறுதி மூன்று மாதங்கள் மொத்தம் ஆறு மாதங்கள் மழைகாலம் மிகுதி ஒன்பது மாதங்களில் முழுவதும் அபிவிருத்தி செய்யமுடியுமா! புயலின் பின்புதான் மட்டக்களப்பு முன்னேற்றம் அடைந்து வருகின்றது என்பதை அவர்கள் உணரவேண்டும்.

மட்டக்களப்பு மாவட்ட மந்திரி திரு. எம். கனகரத்தினம் உரையாற்றுகையில் புயலால் அழிந்த மட்டக்களப்பைபுதுப்பொலிவு பெறச் செய்வதே எமது நோக்கம் இதற்காக நாங்கள் செயல்பட்ட வண்ணம் இருக்கிறோம். நாம் செயல்படுவதுபோல் பொதுமக்களும் செயல்படவேண்டுமென்றார்.

மற்றும் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சொர்ணவடிவேல் உட்பட பலர் உரையாற்றினர். (இ)

### பாற் பண்ணை அபிவிருத்தி

(சித்தன்கேணி)

சித்தன்கேணி பாற்பண்ணைக்கு, வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு 1980-ம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் 15,000 நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

### பதவி உயர்வுடன் இடமாற்றம்

(நீர்வேலி)

உருபப்பாய் பட்டினசபைச் செயலாளர் திரு நா. சிதம்பரநாதர் எழுதுவினைஞர் சேவை தரம் ஒன்றுக்கு பதவி உயர்வு பெற்று வல்வெட்டித்துறை நாரசபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

### தற்கொலை

(கொழும்பு)

தெஹிவளையில் சுமார் 50 வயது மதிக்கத்தக்க இனம் தெரியாத ஒருவர் ரயிலுக்கு கழுத்து வைத்து தற்கொலை செய்துகொண்டார்.

அவர் பெனிடனும் பிஜாமா சாரமும் அணிந்திருந்தார். சடலம் களுபோவில ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

### இந்தியச்சேலைகள் வைத்திருந்தவருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையிலுள்ள கடையொன்றைச் சோதனையிட்ட காங்கேசன்துறை உதவி சுங்கத்தடுப்பு அதிகாரிகள் அங்குஇறக்குமதித்தீர்வுசெலுத்தப்படாதது என்று சந்தேகிக்கப்பட்ட இந்திய காஞ்சிபுரம் மணிப்புரி சேலைகளையும் பட்டு வேட்டிகளையும் கைப்பற்றினர்.

காங்கேசன்துறை உதவிசுங்க அதிகாரி கே. கந்தசாமி தலைமையில் சென்ற சுங்க அதிகாரிகளே இவற்றைக் கைப்பற்றினர்.

இது சம்பந்தமான விசாரணைகளை யாழ். உதவி சுங்க அதிகாரிக திரு. ஏ. பரஞ்சோதி மேற்கொண்டார். கைப்பற்றப்பட்ட வேட்டிகள், சேலைகளில் சில வற்றிற்கு இறக்குமதித் தீர்வை செலுத்திய பற்றுச் சீட்டுகள் சமர்ப்பிக்கப்படாததைத் தொடர்ந்து யாழ். பிரதம சுங்க அதிகாரி திரு. சேனாதிராஜா 4'000 ரூபா அபராதம் விதித்தார். (வே

......

### மின்வெட்டை நிறுத்த கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 26, 27, 28-ந் திகதிகளில் நடைபெறும் செல்வா நினைவாலய திறப்பு விழாவையொட்டிய மூன்று நாள் நிகழ்ச்சிகளின்போதும் தற்போது அமுலிலிருக்கும் மின்வெட்டிலிருந்து விலக்களிக்குமாறு அரசாங்கத்தைக் கோருவதென்று யாழ். மாநகர சபை தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

இதை அடுத்து தமிழர் விடுதலைக்கூட்டணி சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும், செல்வா அறங்காவல் குழு சார்பில் அதன் தலைவர் திரு. ஒ. நேசையா, யாழ். மேயர் திரு. இ. விசுவநாதன் ஆகியோர் மேற்கண்ட கோரிக்கையை அரசுக்கு சமர்ப்பிப்பர் என கூட்டணிப் பிரமுகர் ஒருவர் கூறினார்.

### புதிய தூதுவர்

(கொழும்பு)

மலேசியாவிற்கான இலங்கைத் தூதுவராக திரு. சித்ரா தேசிங்கி நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்பொழுது மக்கள் சீனக் குடியரசின் தூதுவராகப் பணிபுரிந்து வரும் இவர் முன்பு மலேசியத் தூதுவராக கடமையாற்றித் திரு. சிறிசேன கூரேயின் இடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறிசேனகூரே தற்பொழுது கொழும்பு மாநகர சபையின் மேயராகவுள்ளார். (வெ-கு)

......

### நோயின்கொடுமை தாங்காது தற்கொலை

(புலோலி)

நோயின் கொடுமை தாங்க முடியாத நபரொருவர் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டார். இச்சம்பவம் பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த அல்வாய் வடக்கு கிராமத்தில் நிகழ்ந்துள்ளது.

முத்தர் பொன்னையா (வயது 60) என்பவரே நோயின் கொடுமை தாங்க முடியாமல் நஞ்சருந்தித் தற்கொலைசெய்து கொண்டவராவார். மரண விசாரணையின் போது மனைவி நாகம்மா சாட்சியளிக்கையில் கூறியதாவது!

"எங்களுக்கு நான்கு பிள்ளைகள் இருக்கிறார்கள். இவருக்கு வயிற்றுவலி நோய் வருவது வழக்கம். நோய்வரும் காலங்களில் மிகவும்கஷ்டப்படுவார். இவர் மது அருந்தும் பழக்கமுடையவர். சம்பவதினம் வயிற்றுவலிக்கு மருந்துவாங்கி வந்திருப்பதாகக் கூறி அவர் கொண்டுவந்த போத்தலைத் திறந்துகுடித்தார். அப்போது வித்தியாசமான மணம் வீசியதால் நான் என்ன மருந்து என்று விசாரித்தேன். தான் நஞ்சுகுடித்துவிட்டதாகக் கூறினார். நான் கத்தினேன். அயலவர்கள் வந்ததும் அவர்இறந்துவிட்டதாகக் கூறினர்".

மரண விசாரணையை மேற்கொண்ட பருத்தித்துறை பதில் நீதவான் திரு. கே. பாலசுப்பிரமணியம் ஜே. பி. தற்கொலை என்று தீர்ப்பளித்தார்.

## பாண்டியன்தாழ்வு கொலைவழக்கு:

# "பொலிஸில் வாக்குமூலமளித்த மறுநாள் கையெழுத்திட்டேன்"

## செல்லத்துரை சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"குருநகர்ப் பொலிஸ்நிலையத்தில் எனது வாக்குமூலத்தைப் பதிவுசெய்தனர். மறுநாட் காலை அதில் நான் கையெழுத்துப் போட்டேன்."

பாண்டியன்தாழ்வு கொலை வழக்கில் சாட்சியமளித்த செல்லத்துரை மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு யாழ். மேலதிக நீதிமன்றத்தில் நீதவான் திரு. எஸ். நாகராசா முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணை நடைபெற்றது.

இவ்வழக்கில் பாண்டியன் தாழ்வில் யேசுதாசனைக் கொலை செய்ததாக எஸ். யோகராசா, எஸ். ஆனந்தன் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் ஆர். ஈ. தம்பிரத்தினம், இ. கனகசபாபதி, எஸ். யோகநாதன் ஆகியோர் ஆஜரானார்கள். உதவிப் பொலிஸ் அதிபர் ஜனுப் நிசாம் வழக்கை நடத்தினார்.

செல்லத்துரை தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது! சம்பவம் நடந்த இடத்தில் பொலிஸார் வாக்குமூலம் பதிவுசெய்தனர். மறுநாள் எனது வாக்குமூலத்தையும் எடுத்தபின் கையெழுத்துப் போட்டேன். ஸ்தலத்தில் எனது வாக்குமூலம் எடுத்தபின் மற்றவர்களின் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது

குறுக்குவிசாரணையின்போது சம்பவத்தின் முன் அங்கு சண்டை நடந்ததாக அறிந்ததாகவும், நான் அதனைக் காணவில்லையென்றும் செல்லத்துரை கூறினார்.

சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம் குறுக்குவிசாரணை செய்தார்.

சட்: 50 ரூபாவை மாற்றுவதற்குக் கடைக்குக் கொண்டு சென்றிருக்காவிடில் சம்பவத்தைப் பார்த்திருக்கமாட்டீர்?- ஆம்.

சட்: 50 ரூபா யார் தந்தது?-டேவிட் தந்தார்.

சட்; மரண விசாரணையில் நீதவானுக்கு டேவிட் 50 ரூபா தந்ததாகச் சொன்னீர்?- ஆம்.

சட்: நீதவான் கேட்டாரா யார் தந்ததென்று?-ஆம்.

சட்? 50 ரூபா இறந்தவர் தந்ததாக நீதவானுக்குக் கூறினீரா?-இல்லை;

சட்: 50 ரூபா கதை முழுவதும் பொய் என்கிறேன்?- டேவிட் தந்தார்.

சட்: பொலிசாரிடமும் டேவிட் 50 ரூபா தந்ததாகச் சொன்னீரா?-ஆம்.

சட்: பொலிஸ் வாக்குமூலத்தில் நீர் அப்படிக் கூறவில்லை. டேவிட்டின் பெயரையே சொல்லவில்லை?- டேவிட் தந்தார்.

விசாரணை இம்மாதம் 28ந் தேதிக்குப் பின்போடப்பட்டுள்ளது. (க-கு)

### ஈராக் உதவியுடன் மாதிரிக்கிராமம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் உள்ள இருமுஸ்லிம் கிராமங்கள் ஈராக்கின் உதவியுடன் மாதிரிக்கிராமங்களாக அமைக்கப்படவுள்ளன.

மட்டக்களப்பு இரண்டாவது எம் பி. ஜனுப் பரீட் மீராலெப்பையின் முயற்சியின் பிரகாரம் புதுக்காத்தான்குடி ஏறுவூர் ஆகிய கிராமங்கள் மாதிரிக்கிராமங்களாக அமைகின்றன முறையே நாற்பத்தி நாலும் ஐம்பது வீடுகள் அமைகின்றன (கு)

### லயனல் போபகே யாழ். வருகிறார்

(மாவிட்டபுரம்)

மக்கள் விடுதலை முன்னணியின் பிரமுகர் திரு. லயனல் போபகே இம்மாதம் 19-ந் திகதி வடபகுதிக்கு விஜயம் செய்ய இருக்கிறார்.

அன்று மாலை குப்பிளான் லெனின் சனசமூக நிலைய ஆதரவில் இடம்பெறும் கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு இன்றைய அரசியல் நிலை குறித்து பேசுவதுடன் தொடர்ந்து 3 தினங்கள் வரை அவர் பகுதியில் தங்கியிருந்து தங்குகளில் பங்குபற்றுவார் (கு)

### கொலை

(கொழும்பு)

கொச்சிக்கடை எட்வின்சில்வா மாவத்தையில் 42 வயதுள்ள வியலகே என்பவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மதுபோதையில் ஏற்பட்ட திடீர் ஆத்திரத்தினால் இக்கொலைச்சம்பவம் ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் கருதுகின்றனர். இது தொடர்பாக இருவரைப் பொலிஸார் தேடுகின்றனர்.


## வளர்ந்தோர் கல்வி ஒழுங்கு படுத்துபவர்

பாடசாலை கல்வி முறையினும் மாறுபட்ட புதிய வளர்ந்தோர் கல்வியினை ஒழுங்குபடுத்துவதற்காகவும், ஆசிரியரோ சான்றிதழ்களோ இல்லாத கல்விக்குருவாக இயங்கும் சூழற் கல்விஒழுங்கு படுத்துபவர்.

முழு நேர வேலை, சம்பளம் திறமைக்கேற்றபடி, யாழ். மாவட்டத்தின் மேற்குப் பகுதிகளில் வேலை செய்யவேண்டும்.

கல்வித்தகைமை

ஆங்கிலம் பேசக்கூடியவராகவும், தன்னிச்சையாக இயங்கக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

18-4-80ல் அன்று மாலை 4 – 5 மணிக்கு நேரில் வரவும்

OLLE HAEGGBLOM
St Antonys Lane,
OFF KEERIMALAI ROAD, PANDATERRIPU.
5474


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வீடுடைத்து கொள்ளை:

# எதிரிகள் நால்வருக்கும் கடூழியச் சிறைத்தண்டனை

(யாழ்ப்பாணம்)

வீடுடைத்துக் கொள்ளையடித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு தொடரப்பட்ட வழக்கில் எதிரிகளுக்கு 6 மாத கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ் நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரி யோகநாதன் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் எஸ் இராசலிங்கம் 23 வயது), யோசேப் செல்வராசா (22 வயது), எஸ். இராசு (18 வயது), சிமியோன் ரூதா (18 வயது) ஆகியோர்கள் நால்வரும் யாழ்ப்பாணம் 3ம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த பொறியியலாளர் கே. சவரிமுத்து மட்டுநகர் சென்றிருந்தசமயம் அவரது வீட்டில் 21 ஆயிரத்து 760 ரூபா பெறுமதியான இரண்டு ரேடியோக்களையும் விலையுயர்ந்த புடவைகள் மற்றும் சாமான்களையும் கொள்ளையடித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் நால்வரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து நீதவான் எதிரிகளான இராசலிங்கம், இராசா, ரூதா ஆகியோருக்கு தலா ஒரு மாதச் சிறைத் தண்டனையும், யோசேப் செல்வராசாவுக்கு ஆறு மாதச் சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி எஸ். சபாரத்தினம் ஆஜரானார். கான்ஸ்டபிள்கள் எஸ். இரத்தினசபாபதி, எஸ். குணரத்தினம் ஆகியோர் வழக்கை நடாத்தினர். திருடப்பட்ட பொருட்கள் மீண்டும் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது. [கொ-கு]

# 'பொருளாதாரத் துறையில் கவனம் செலுத்தவேண்டும்''

## மாணவர்களிடம் உ.அ. அதிபர் கோரிக்கை

(உடுப்பிட்டி)

''எமது மாணவர்கள் தமது திறமையைப் பயன்படுத்தித் தமது பகுதிகளிலேயே பொருளாதாரத் துறையில் கவனம் செலுத்தவேண்டும். வெளிநாட்டு மோகத்தைக் கைவிட்டு சுய தொழில் உற்பத்தித்துறைகளில் ஈடுபடவேண்டும்.''

இவ்வாறு கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. மு தம்பிமுத்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி உயர் வகுப்பு மாணவர் மன்றத்தின் வருடாந்த விருந்துபசாரத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

மன்றத் தலைவர் திரு. கே. ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு தம்பிமுத்து மேலும் பேசுகையில், ''எமது மாணவர்கள் கல்வி கற்றுவிட்டு அரசாங்க உத்தியோகங்களை எதிர்பார்த்து வாழ்நாளை வீணாக்கி வருகின்றனர். மாணவர்கள் சுய தொழில், கைத்தொழில் துறைகளில் ஈடுபட்டால் அதிக வருவாயைப் பெறலாம்'' என்றார்.

உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு வ.க ஈசுரநாதம், அதிபர் திரு வி.என். சச்சிதானந்தம் உட்படப் பலரும் பேசினர். (உ)

# ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியா பங்குபற்றும்

## பாரதஒலிம்பிக்சங்கத்தலைவர் அறிவிப்பு

புதுடில்லி ஏப் 14

''ஒலிம்பிக் இயக்கத்தின் உன்னதமான இலட்சியத்துக்கும் அரசியல் சூழ்ச்சிகளுக்கும் சில மேற்கத்திய நாடுகள் பின்பற்றும் சதி சூழ்ச்சிகளுக்கும் சம்பந்தமே கிடையாது திட்டமிட்டபடி மாஸ்கோவில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற வேண்டுமென்ற முடிவை இந்திய ஒலிம்பிக் சங்கம் ஏகமனதாக ஆதரிக்கிறது''.

இவ்வாறு இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் திரு. ஓ பி. மெஹ்ரா அறிவித்துள்ளார்.

''இந்திய விளையாட்டுவீரர்கள் மாஸ்கோ ஒலிம்பிக் போட்டிக்கு தயார் செய்து கொண்டிருக்கின்றனர். இந்திய வீரர்கள் எத்தனை விளையாட்டுகளில் கலந்து கொள்வார்கள் என்பது பற்றி தற்சமயம் கூறமுடியாது ஒலிம்பிக்குக்குத் தயாரான உத்தும் போட்டிகளின் பிரதிபலன்களை பொறுத்தே இது நிர்ணயமாகும் என்றும் மெஹ்ரா அறிவித்தார்.

கடந்த ஆண்டில் சோவியத் மக்கள் விளையாட்டுப் போட்டிகளுக்கு சென்ற தூதுகோஷ்டிக்கு மெஹ்ரா தலைமை வகித்து இங்கு குறிப்பிடத்தக்கது.

# திபெத்தில் தீவிர நடவடிக்கை

ஹாங்காங், ஏப். 14

திபெத்தின் தலைநகரான லாஸாவுக்கு 200மைல்வடக்கே மத்திய திபெத்தில் நாக்சூ பகுதியில் சீன முக்கியமான ஏவுகணைத்தளமொன்றை நிறுவிவருகிறது என்று பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இப்பகுதியில் 2500 கிலோ மீட்டர் செல்லக்கூடிய 100 நத்தியரக ஏவுகணைகளை சீனா நிறுவியுள்ளது என்று மேற்கத்திய ராணுவ நிபுணர்களை மேற்கோள் காட்டி இங்கு வெளியாகும் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேற்குஜெர்மன் 'தி வேல்ட்' பத்திரிகையை மேற்கோள் காட்டிய இங்குள்ள ஏடுகள், 4500 கிலோ மீட்டர் செல்லக் கூடிய ஏவுகணைகளை சீனா திபெத்தில் பொருத்திவருவதாகத் தெரிவித்துள்ளது.

''நாக்சூவில் ராடார் நிலையங்களும் நிறுவப்பட்டு வருகின்றன. நகரங்களை இணைக்கும் ராணுவ பாதைகளும், ரயில் பாதையும் நிர்மாணமாகி வருகின்றன. திபெத் ராணுவமயமாக்கப்படுவதும் சீனர்கள் அங்கே குடியேற்றப்படுவதும் தீவிரமாக நடக்கின்றன திபெத்தில் 250,000-350,000 சீன துருப்புக்கள் உள்ளன அத்துடன் பல ஆயிரம் சீனமக்கள் குடியினரும் உள்ளனர்'' என பத்திரிகைகள் எழுதியுள்ளன.

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 3-ம்திகதி

(15-4-80) செவ்வாய்க்கிழமை

மேடம்: விரக்தியில் உருவாகும் வேண்டாத தொடர்புகளால் தொல்லைகள் தோன்றக்கூடும் உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம். நன்குசிந்தித்தபின் செயலாற்றுக.

இடபம். மேடைப் பேச்சாளர்கள் இன்று பெரும் புகழ் அடைவர். இனபந்துக்களின் கொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு, பொதுவாக வாழ்க்கையில் முன்னேற்றமுண்டு.

மிதுனம்: எதிலும் அலட்சிய மனப்பான்மை தோன்றக்கூடும். சகோதரவழியால் சஞ்சலத்துக்கும் இடமுண்டு இனபந்துக்களின் தொல்லைகள் அதிகரிப்பதற்கு இடமுண்டு மெதினம் நன்று

கடகம்-ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம்தோன்றும். வாகனத்தின் மூலம் அதிக பொருள் வரவுக்கும் இடமுண்டு. வினைபொருள் விருத்தியும் வியாபார முன்னேற்றமும் ஏற்படும் நல்லநாள்.

சிங்கம்- நீண்டநாள் கனவு இன்று நனவாகும். தொழில் வேட்டையில் வெற்றி கிடைக்கலாம்? அரசாங்க ஊழியர்களாயின் பதவிஉயர்வுக்குநடவடிக்கை எடுக்கப்படும் வீட்டிலும் அமைதியுண்டு

கன்னி- புதிய எண்ணங்கள் தலைதூக்கும். சுற்றுடலில் மதிப்பு உயர்வதற்கு இடமுண்டு கழுகுப்பார்வை செலுத்தியவர்கள் கைகொடுத்து உதவுவார்கள் அவசரச் செய்தியொன்று சிந்தனையைத் தூண்டும்.

துலாம்: நீண்டநாள் எதிர்பார்த்த நல்ல திருப்பம் இன்று ஏற்படமுடியும் குடும்பவிவகாரங்களில் பிணைப்புகள் இறுகும் காதல் உலகில் களிவான சம்பவங்கள் இடம்பெறும் சுபபோக நாள்.

விருட்சம் பிரச்சினைகள் மேலும் சிக்கலாகும் உணவு விடயத்தில் பிரியக்குறைவு தென்படும் கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருப்பது நன்று உடல்நலனில் அதிக கவனம் வேண்டும்

தனு: ஒளிமயமான எதிர்காலத்துக்கான அறிகுறிகள் தென்படும் புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும் மனதில் புதிய உற்சாகம் பிறக்கும் பிள்ளைகளினால் பெருமைக்கு இடமுண்டு இல்லத்திலும் இனியவை நடக்கும்.

மகரம், தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும் மேலதிகாரிகளின் பாராட்டுகளுக்கு இலக்காகுவீர்கள். உங்கள் வாழ்க்கையில் கடல் கடந்த பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம்.

கும்பம்: நினைத்த காரியத்தில் வெற்றியுண்டு. எதிர்பாராத வகையில் உங்களுக்கு ஆதரவு பெருகும் பகைத்தவர்களே உங்களைப் பாராட்டிச் செய்வார்கள். சிறப்பான தினம்

மீனம்: தொழில் புரியும் இடத்தில் கருத்து வேற்றுமைகள் தோன்றக்கூடும். கொடுக்கல் வாங்கல் மூலம் எதிரிகளைத்தேடிக் கொள்வீர்கள் பொருள்விடயத்தில் கவனம் செலுத்தவும்.

சோதிடக் கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

# வேதாகம விடுமுறை வகுப்புகள்

(அரியாலை)

சுண்டிக்குளி பரி. யோவான் ஆலய ஜெப மண்டபத்தில் வேதாகமவிடுமுறை வகுப்பு இம்மாதம் 26ம் திகதி தொடக்கம் நடைபெறவிருக்கிறது. இவ்வகுப்புக்களை திரு. [illegible] நடத்துவார்.

# தமிழ்ப்பிரயாணிகள் அவதி

(மன்னார்)

தலைமன்னார் பியர்ரயில் நிலையத்தில் அறிவிப்புகள் யாவும் தனிச்சிங்களத்தில் இடம் பெறுவதாலேயே பிரயாணிகள் அவதியுறுகின்றனர்.

இந்தியா செல்லும் இந்திய வம்சாவளியினரும் இலங்கை வரும் உல்லாசப் பிரயாணிகளும் இதனால் பெரும் சிரமத்தைத் தொடருமிடமான [illegible]

தலைமன்னார் பியர் நிலையத்தில் தனிச்சிங்களத்தில் அறிவித்தல் [illegible] இடம் பெறுவதுள்ளது.

# ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக அர்ப்பணித்தவர்''

(அரியாலை)

''தமிழ் பேசும் மக்களின் ஒரு பகுதியினர் தாம் பிறந்த மண்ணிலே உரிமையற்றவர்களாக, அடிமைகள்போல வாழ்வது இந்நாட்டிற்கே அவமானமாகும் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக தன் வாழ்நாள் முழுவதும் தன்னை அர்ப்பணித்து உழைத்த அமரர் எஸ் ஆர் ஜேக்கப் (காந்தி) இலட்சியமும், கொள்கையுமே அவர் மறைந்தாலும் அவரை நினைவு கூரச் செய்கிறது.''

இவ்வாறு முன்னாள் செனட்டர் திரு பொ. நாகலிங்கம் உடுவில் உதயசூரியன் சனசமூக நிலைய மண்டப முன்றலில் அமரர் எஸ் ஆர். ஜேக்கப்பின் நினைவு தினக்கூட்டத்தில் அவரின் படத்தைத் திரை நீக்கம் செய்து வைத்து பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு வ இராசகோபால் தலைமையில் நடைபெற்ற நினைவு தினக்கூட்டத்தில் அமரரின் நினைவு மலரை திரு. மாணிக்கம் வெளியிட்டு வைத்தார் முதற் பிரதியை காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன முகாமையாளர் திரு. சி. ஈ குணரத்தினம் பெற்றுக் கொண்டார்

திரு பொ. நாகலிங்கம் தொடர்ந்து பேசுகையில், என்ன கஷ்டம் வந்தாலும் தான் எடுத்துக் கொண்ட இலட்சியத்துக்காக உழைத்த வீரர் இவர் அவரது பிரிவு இந்நாட்டில் வாழும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மட்டுமல்ல முற்போக்கும் கொள்கையுள்ள சகலருக்கும் ஏற்பட்ட பெரும் இழப்பாகும். அவர் மாணவனாக யாழ்ப்பாணக் கல்லூரியில் சேர்க்கப்பட்டபொழுது ஏற்பட்ட சாதிப் போராட்டத்தை அன்றைய கல்லூரி அதிபரான அருட் திரு பிக்னல் பாதிரியார் முறியடித்தார். அன்றிலிருந்து ஜேக்கப் தன்னைச் சாதிக் கொடுமைக்கு எதிரான போராளியாக மாற்றிக் கொண்டார். அவர் நடாத்திய போராட்டங்களில் வின்லூன்றி மயானப் போராட்டம் மிகவும் முதன்மையானதாகும். தான் ஆரம்பத்தில் கொண்டிருந்த சர்வஜன வாக்குரிமைப் போராட்டத்தில் வெற்றி பெற்ற அவர், வாக்குரிமையின் மூலம் வெற்றி பெற்ற வீரனாக உடுவில் கிராமச்சபையிலும், சுன்னாகம் பட்டின சபையிலும் அங்கத்துவம் வகித்து, தன்னைத் தெரிவு செய்த மக்களுக்காகவும் அப்பகுதியில் வாழ்ந்த சகல மக்களுக்காகவும் தனது பங்கைச் செலுத்தினார்'' என்று குறிப்பிட்டார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. எம். சி. சுப்பிரமணியம் பேசுகையில் ஜேக்கப் காந்தியின் வாழ்வு ஆரம்பம் முதல் இறுதிவரை போராட்ட வாழ்வாகவே அமைந்தது மனித உரிமை மறுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்து உழைத்த போராளியாக அவர் விளங்கினார்.

சாதிக் கொடுமைகளை எதிர்த்து அவரால் திருநெல்வேலி, கீரிமலை, பன்னாகம் ஆகிய பகுதிகளில் நடாத்தப்பட்ட போராட்டங்கள் பெரும வெற்றியை அளித்ததுடன் ஒடுக்கப்பட்ட மக்களை ஒன்றிணைக்கச் செய்தது. அன்று சமாசனம் கோரி நடாத்தப்பட்ட போராட்டங்கள் வெற்றியளித்தன. சமாசனம் வழங்கிய அநேக பாடசாலைகள் அன்று சாதிவெறியர்களால் தீக்கிரையாக்கப்பட்டன. அத்துடன் சாதிப்போராட்டம் தலைவிரித்தாடவே பல பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்களின் வீடுகளும் தீக்கிரையாக்கப் பட்டதுடன் அவர்கள் அகதிகளாக ஆக்கப்பட்டனர் இலங்கைக்கு காந்தியடிகள் வந்தபோது முன்வைத்த தீண்டாமை ஒழிப்பு மநுவுக்கு ஆகிய வற்றில் அன்று இந்நாட்டில் காந்தி பக்தர்கள் தமமை மாற்றிக் கொண்ட பலர் தீண்டாமை ஒழிப்பில் கவனம் செலுத்தாது மதுவிலக்கிலே தமது கவனத்தைச் செலுத்தி இதன் மூலமும் தீண்டாத மக்களை ஒதுக்கிவைத்தனர். அன்று அரசினரால் அமுல் செய்யப்பட்ட தவறணை முறைக்கு எதிராக குரல் கொடுத்து மரவரி முறையை மீண்டும் கொண்டுவந்து அதன் மூலம் மேற்கொண்ட மக்களுக்கு வாழ்வளித்த வீரனாக மதிக்கின்றார் அவரது சேவை என்றும் நாம் நினைவு கூரவேண்டியதாகும் என்றும் திரு. எம். சி சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

அமரர் ஜேக்கப் காந்தியின் நினைவுகுறித்து திருவளர் வி. ஏ கந்தசாமி, கே. டனியல், மு முத்தையா ஆகியோர் உட்படப் பலர் பேசினார்கள்

இலவச பாடப்புத்தகங்கள்

# திருப்பி ஒப்படைக்காவிடில் தண்டிக்கக் கூடாது

## அதிபருக்கு அமைச்சு வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

''பாடசாலைகளிலிருந்து விலகிச் செல்லும் மாணவர்கள் தாம் இலவசமாகப் பெற்ற பாடப்புத்தகங்களை திருப்பி ஒப்படைக்காவிடின் அவர்களை எந்தவிதமான தண்டனைக்கும் உட்படுத்தக்கூடாது.''

இவ்வாறு கல்விச் சேவைகள் அமைச்சின் செயலாளர் திரு. சரத் அமுனுகம சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள அறிவித்தலில் வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

பிரஸ்தாப அறிவித்தலில் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பாடசாலை அதிபர்கள் பணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பாடசாலையை விட்டு விலகி புதிதாக வேறு பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களாயின் அவர்கள் பெற்ற இலவசப் புத்தகங்களையும் கொண்டு செல்ல அனுமதி வழங்குவதுடன் பிரஸ்தாப புத்தகங்களின் விபரங்களை புதிதாக அனுமதி பெறும் பாடசாலை அதிபருக்கும் தெரியப் படுத்தல்.

இடம் மாறி புதிதாக வந்து சேரும் மாணவர்களிடமிருந்து அவர்கள் கொண்டு வரும் இலவசப் பாட புத்தகங்களின் விபரங்களைப் பதிவேட்டில் பதிவு செய்தல்.

மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்ட இலவசப் பாடப் புத்தகங்களை மீண்டும் வருட முடிவில் திருப்பிப் பெறுதல்.

புதிதாக அனுமதிபெறும் மாணவர்களுக்குவிதிக்கப்பட்ட புத்தகங்களை இலவசமாக வழங்குதல். (கு)

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கருத்தடை செய்யும் ஆண் பெண் இருபாலருக்கும் தலா 100 ரூபா வீதம் உதவிப் பணம் வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்திற்கு முதல் கட்டமாக மன்னார் மாவட்டத்திற்கு 5000 ரூபா வழங்கப்பட்டுள்ளது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லைபீரியா: இராணுவ-சிவில் அரசு பதவியேற்றது!

## முன்னாள் அதிகாரிகள் மீது விசாரணை ஆரம்பம்!

**மொன்றேவியா ஏப். 14 வட ஆபிரிக்கத் தலைநகரான லைபீரியாவில் இப்பொழுது அமைதி நிலவுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இங்கு இராணுவ - சிவில் அதிகாரிகளைக் கொண்ட அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது.**

கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட திடீர் இராணுவப் புரட்சி மூலம், லைபீரியா ஜனாதிபதி திரு. ரொல்போட்டின் ஆட்சி கவிழ்க்கப்பட்டுள்ளது ஜனாதிபதி கொலைசெய்யப்பட்டார் என்றும், அவரது ஆதரவாளர்கள் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது

அரசு அதிகாரிகள் எவருமே நாட்டைவிட்டு வெளியேறாத வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. முன்னைய அரசில் முக்கிய பதவி வகித்தவர்கள் அனைவரும் தேடப்பட்டுவருவதாகவும், அவர்களைக் கண்டுபிடிப்பதில் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அறிவிக்கப்பட்டது.

அதேநேரத்தில் வெளிநாட்டவர்கள் பாதுகாப்பாக இருப்பதாகவும், அவர்களின் உடைமைகளைப் பாதுகாக்க புதிய அரசு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இராணுவப் புரட்சியை நடத்தி, ஆட்சியைக் கவிழ்த்து புதிய அரசாங்கத்தை அமைத்துள்ள இராணுவ ஜெனரலின் வயது 28 ஆகும்.

புதிய அரசாங்கத்துக்கும் அமெரிக்காவுக்குமிடையே ராஜீயத் தொடர்பு ஏற்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது

இராணுவ, சிவில் அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ள அதே நேரத்தில் தனது முதல்நடவடிக்கையாக பதவியிலிருந்து வெளியேற்றப்பட்ட முன்னை அரசு அதிகாரிகள்மீதான விசாரணைகளை இன்று ஆரம்பித்தது.

### ஆப்கான் விவகாரம்:

## இந்திய--பாக் பேச்சுக்கள்: பொதுத் தீர்மானம் இல்லை

இஸ்லாமாபாத். ஏப். 14

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் விசேட தூதர் திரு சுவர்ண்சிங்குக்கும் பாகிஸ்தான் தலைவர்களுக்குமிடையே நடைபெற்றபேச்சுக்கள் பொதுவான தீர்மானம் எதுவும் எடுக்காமலேயே முடிவடைந்தன

ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் சோவியத் யூனியன் தலையீடு குறித்து இருநாடுகளின் தலைவர்களும் இங்கு இரண்டு நாட்களாக பேச்சுகள் நடத்தியபோதிலும் பொதுவான தீர்மானம் எதையும் எடுக்க பேச்சுக்கள் வழிவகுக்கவில்லை என்று அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு நாடுகளின் பிரதிநிதிகளும் மீண்டும் சந்தித்து பேச்சுக்கள் நடத்துவதென்று கூட்டத்தின் முடிவில் தெரிவிக்கப்பட்டதாக இஸ்லாமாபாத் செய்திகள் தெரிவித்தன

திரு. சுவர்ண்சிங், பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஸியாவுல்ஹக்கையும் சந்தித்திருந்தார்.

## ★ அதிமுக-ஜனதா வெற்றிபெற்றால் எம். ஜி. ஆர். தலைமையில் ஆட்சி அமைக்கப்படும்

சென்னை. ஏப். 14

எதிர்வரும் மாநில சட்டசபைத் தேர்தலில் தமிழகத்தில் அ. தி. மு. க- ஜனதா கூட்டணி வெற்றியீட்டுமானால் அ. தி. மு. க. தலைமையிலேயே ஆட்சியமைக்கப்படும்.

இவ்வாறு அ. தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. இரா நெடுஞ்செழியன் கூறினார்.

அ. தி. மு. க. தலைமையில் ஆட்சியமைக்க கூட்டணியைச் சேர்ந்த தோழமைக் கட்சிகள் இணக்கம் தெரிவித்துள்ளன என்றும் திரு. நெடுஞ்செழியன் கூறினார்.

இதே சமயம் தி. மு. க- இந்திரா காங்கிரஸ் கூட்டணி வெற்றிபெற்றால்எக்கட்சியைச் சேர்ந்தவர் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்படுவார் என்பது இன்னமும்முடிவாகவில்லை என்றும் இது பற்றித் தீர்மானிக்க இது தருணம் அல்லஎன்றும் தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. எம். பி. சுப்பிரமணியம் கருத்துத்தெரிவித்துள்ளார். (இ)

### கொமெய்னி பற்றி "நியூஸ்வீக்"

நியூயோர்க், ஏப் 14

ஈரானிய மதத்தலைவர் அயத்தொல்லா கொமெய்னி மிகுந்த வயோதிபப் பருவத்தை அடைந்துவிட்டாரென்று பிரபல சஞ்சிகையான 'நியூஸ் வீக்' கருத்து வெளியிட்டுள்ளது.

சிக்கலான பிரச்சினைகள் எதையும் புரிந்துகொள்ள முடியாத வயோதிபநிலையில் கொமெய்னி இருக்கிறார். அவரால், நிதானமாக இயங்க முடியவில்லை'' என்று 'நியூஸ் வீக்' எழுதியுள்ளது.

## அண்ட வெளியில் அணு ஆயுதங்கள்

### அமெரிக்கா திட்டமிடுகிறதாம்

நியூயோர்க், ஏப். 14

விண்வெளியில் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை சுழலவோ அல்லது தரித்து வைக்கவோ முடியுமா என்பது குறித்து அமெரிக்க ராஜாங்க இலாகா ஆராய்ந்து வருகிறது.

இது பற்றிய பரிசோதனைகளை நடத்துமுகமாகமேமாதத்தில் 'போயிங்' கம்பனியுடன் உடன்படிக்கையொன்றை ராஜாங்க இலாகா கைச்சாத்திடுமென்றும் இது, ஆயுதப் போட்டியை அண்டவெளிக்கு எடுத்துச்செல்ல வழிவகுக்கும் என்றும்; உலகநெருக்கடியை உக்கிரப்படுத்துவதுடன், சர்வதேச உடன்படிக்கைகளைமீறும் செயலாகவும் இது இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

விண்வெளி ஆராய்ச்சி, பாவனை பற்றிய கோட்பாடுகள் சம்பந்தமான உடன்படிக்கையில் அமெரிக்காவும் கையொப்பமிட்டுள்ளது. உடன்படிக்கையின் 4-வது ஷரத்து அணுஆயுதங்களையோ அல்லது பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களையோ செலுத்தக்கூடாதென்றுதிட்டவட்டமாக தடைவிதிக்கிறது.

### அமெரிக்க ஒலிம்பிக்குழு பகிஷ்கரிக்கும்

வாஷிங்டன், ஏப். 14

மாஸ்கோவில் நடைபெறும் ஒலிம்பிக்போட்டிகளைப் பகிஷ்கரிக்கவேண்டும் என்று அமெரிக்க அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க,இப்போட்டிகளில் கலந்து கொள்வதில்லையென்று அமெரிக்க ஒலிம்பிக்குழு முடிவுசெய்துள்ளது.

## "உலகப்போர் மூண்டால் சீனா நஷ்டமடையாது"

### — துணைப்பிரதமர்

நியூயோர்க், ஏப். 14

"உலகப்போர் மூண்டால் அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, ஜப்பான்போன்ற நாடுகள் அழிந்து போகலாம். சீனா ஒரு ஏழை நாடு. போரில் விசேஷமாக நாம் இழந்துவிட எதுவும் கிடையாது'' என்று சீன துணைப் பிரதமர் தெங் ஸியாவோ பெங் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுப் பத்திரிகைகளின் பிரதிநிதிகளுக்கு பீகிங்கில் அளித்த பேட்டியொன்றிலேயே பெங் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"சோவியத்யூனியன் உலக மேலாதிக்கத்தை ஸ்தாபிக்க முயல்கிறது. ஹிட்லருடைய கொள்கையும் சோவியத்யூனியனின் கொள்கையும் ஒரே கோட்டில் செல்கின்றன. சீனாவும் அமெரிக்காவும் நெருங்கிய தொடர்புகளை நிறுவிக் கொள்ளவேண்டும்'' என்றும் அவர் மேற்படி பேட்டியில் தெரிவித்துள்ளார்,

### டாங்கே தலைமையில் புதிய கட்சி

நாக்பூர், ஏப் 14

முன்னாள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எஸ். ஏ. டாங்கே, "அகில பாரத கம்யூனிஸ்ட் கட்சி'' எனும் பெயரில் புதிய கம்யூனிஸ்ட் கட்சியைஆரம்பித்துள்ளார்.





உங்கள் பயிருக்கு பாயர் பாதுகாப்பு

# சேர்கோப்பூர்

36% (3, 4, டீ. பீ. ஏ. கொண்டது)

சேர்கோப்பூர் 36% (பட்ட மாத்திரத்திலேயே) சேறான அல்லது உலர்ந்த நெல் வயலில் உள்ள நெற்சப்பி, கோழிச்சூடன், குதிரைவாற்புல், கிடைச்சி, கோரை, மொண்டி ஆகிய சகல களைகளையும் கட்டுப்படுத்தும் வன்மையான களைநாசினி. உச்சப் பயன் பெற, விதைத்து 7-21 நாட்களுள் சேர்கோப்பூர் தெளிக்க வேண்டும். களைகள் 2-3 இலை விட்டிருக்கும் காலத்தில் பாவிப்பதே மிகச் சிறந்தது, சேர்கோப்பூர் 36% பாவித்து நெற்களைகளைக் கட்டுப்படுத்தி விளைச்சலைக்கூட்டி இலாபத்தைப் பெருக்குங்கள்.

தரமான BAYER பாயர் பீடைநாசினிகளைப் பாவியுங்கள்.

இலங்கையில் பாயர் பீடைநாசினிகளைத் தயாரிப்போர்:

ஹேக்கெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10. தொலைபேசி: 93565, 96291-9.

ADS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தன் உயிருக்கு அபாயம் ஏற்படத்தக்க தறுவாயிலும் இவ்வுலகில் உண்மை உரைப்போன் உண்மையாக உயர் மகனே. அவனை வரும் பின்பற்றி நடப்பதற்கு அவன் ஒரு முன்மாதிரியானவன். அவன் எல்லாக்கஷ்டங்களையும் மேற்கொள்வதில் சித்தி யடைகிறான்.

—சுவாமி சிவானந்தர்

## மக்கள் கருத்து

### அற்புதமான நடனம்

பாலையைக் குருடர்கள் பார்த்த கதை எல்லோருக்கும் தெரியும் 'ஈழநாடு' இதழில் வெளிவந்த 'மாலி'யின் விமர்சனத்தைப் பார்த்தபின் அக்கதையின் ஞாபகம் நான் எனக்கு வந்தது. யாழ். செயலகக் கலாசார மன்றத்திற்கு ஒரு தனிப்பட்ட அல்லது சில குறிப்பிட்ட ரகமான கலைகளை மட்டுந்தான் வளர்க்கவேண்டுமென்ற எண்ணம் கிடையாது. எது எதற்குத் திறமையும் புதுமையும் காணப்படுகின்றதோ அதை ஊக்குவிப்பதே அதன் நோக்கம்.

செல்வி கிரிஜாவின் நடனத்தைப்பற்றிவிமர்சிக்கு முன்னர், அவர் ஏன் 'டேப்' சங்கீதத்துடன் நடனமாடினர் என்பதனை ஆராயவேண்டும். மன்செஸ்டர், பாரிஸ், சிங்கப்பூர் ஆகிய எல்லா இடமும் சென்று நடனமாடிய அவருக்குப் பணமில்லாமல் சங்கீதக்காரரை அமர்த்தவில்லை என்று கூறுவது மூடத்தனம். இதற்கு ஒரு அடிப்படைக்காரணம் உண்டு தனது தாயார் இறந்த குறிப்பிட்ட காலவரை கழியாதபடியால கிரிஜாவின் குழுவிற்கு இந்நடனத்திலே நட்டுவாங்கம்செய்ய முடியாதுபோயிற்று. எனவே அவர் குழுவின் குரலை 'டேப்'பில் பதிவு செய்து பயன்படுத்தினர். இதில் பிழைகள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

பாம்பு நடனத்திற்கு அணியப்பட்ட உடை—'ஒழுக்கமான'தாகவே எமக்குப்பட்டது. ஒளிபட்டு மின்னும்பொழுது பாம்பின் சாயல் தெரிந்தது. அவ்வுடை இந்தியாவிலே வாங்கப்பட்டது. மேல் நாட்டு உடையல்ல.

ஒரு நடனத்தை ஒலிப்பதிவு செய்துவைக்க விரும்புவதில் எந்தவிதத் தவறுமில்லையே. இதனை ஒரு 'பாஷாணக' அவர்கள் செய்யவில்லை. நல்ல நடனத்தை நினைவுகூரவே அம்முயற்சி எடுக்கப்பட்டது.

நாதஸ்வரத்திற்கு நடனமாடுவது மெச்சத்தக்கது. யாழ்ப்பாணத்தில் இப்பாணியில் நடனம் இடம் பெறுவது இதுவே முதற்தடவை. அதன் அனுபவத்தை விட்டு அபாண்டம் பேசுவதா? விமர்சனம் நடனத்தைப்பற்றி அமையவேண்டுமே ஒழிய தனிப்பட்டவரைப்பற்றியல்ல என்பதனை நாம் மனதில் வைத்துக்கொண்டால் தெளிவான கருத்துக்கள் வெளிவரும்.

கலைஞன்
கே. எஸ், மணியம்
கொக்குவில்.

### செல்வாவிழாவில் மட்டுநகர் இளைஞர்கள்

(மட்டக்களப்பு)

யாழ்ப்பாணத்தில்இம்மாதம் 26-ம் திகதி நடைபெறவுள்ள தந்தை செல்வா நினைவு தூபி திறப்பு விழா வைபவத்தில் மட்டக்களப்பிலிருந்து நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கலந்து கொள்ள வுள்ளனர்.

# யாழ். நகரமண்டபத்தில் 'அமிர்' நிகழ்த்திய உரையின் கருத்தென்ன?

## அவரே விளக்கம் தருகிறார்

**யாழ் நகர மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற தந்தை செல்வா நினைவு விழாவின்போது தமிழர் விடுதலைக்கூட்டணி செயலதிபர் திரு அ. அமிர்தலிங்கம் நிகழ்த்தியஉரை 2-4-80 அன்று 'ஈழநாடு' இதழில் வெளியாகியிருந்தது. அதில் திரு. அமிர்தலிங்கம் சுயாட்சிக்கழகத் தலைவர் திரு வி. நவரத்தினம்பற்றி வெளியிட்டிருந்த குறிப்புக்குறித்து திரு நவரத்தினம் எழுதிய விளக்கம் 8-4-80 அன்று 'ஈழநாடு' இதழில் வெளியானது. அந்த விளக்கத்துக்கு திரு. அமிர்தலிங்கம் அனுப்பியுள்ள பதில் இங்கே தரப்படுகின்றது.**

(ஆ-ர்)

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெற்ற தந்தை செல்வநாயகம் அவர்களின் பிறந்ததினவிழாவில் நான் பேசியதாக வெளிவந்த பத்திரிகைச்செய்திபற்றி திரு வ. நவரத்தினம் அவர்கள் மிகவும் ஆத்திரத்தோடு என்னைச் சாடியிருக்கின்றார், அவர் உபயோகித்தது போன்ற சொற்களை உபயோகித்தோ ஆத்திரத்தைக் கொட்டியோ நான் பதிலளிக்கவிரும்பவில்லை. அவருடைய அறிக்கையில் ஞாபக மறதியாகவோ வேண்டுமென்றோ சில தவறுகளும் உண்மைக்கு மாறான செய்திகளும் இடம்பெற்றிருக்கும் காரணத்தினால் அவற்றைத் திருத்தும் பொருட்டே இந்த அறிக்கை வெளியிடப்படுகின்றது.

முதலில் டட்லிசேனநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தத்தை திரு. நவரத்தினம் எதிர்த்தார் என்று என் பேச்சில் எந்த சந்தர்ப்பத்திலும் நான் கூறவில்லை. அந்த ஒப்பந்த அடிப்படையில் சிலவற்றைச் சாதிக்க முயன்ற தந்தை செல்வநாயகம் அவர்கள் டட்லிசேனநாயகா அரசாங்கத்தோடு ஒத்துழைத்துக்கொண்டிருந்த காலத்தில் திரு. நவரத்தினம் அவர்கள் கட்சிக் கட்டுப்பாட்டை மீறிகட்சியைவிட்டுவெளியேறி புதுக்கட்சி ஆரம்பித்து கட்சியைப் பலவீனப்படுத்தியதும் கட்சியில் இருந்த ஊழியர்கள் சிலரை தம்முடன் பிரித்துச் சென்று அவர்களை இயக்கத்திற்கு உதவாதவர்கள் ஆக்கியதுமே இந்தப்பிரிவால் ஏற்பட்ட பலன் என்றே நான் எனது உரையில் குறிப்பிட்டேன்.

### பாராளுமன்ற உரைகள்

பாராளுமன்றத்தில் 1968-ம் ஆண்டு திரு. நவரத்தினம் அவர்கள் பேசிய பேச்சும் அதைத்தொடர்ந்து கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா தமிழ்அரசுக்கட்சியில் முதல் துண்டு வெடித்துப்பறந்துவிட்டது என்று எம்மைத் தாக்கி ஆற்றிய உரையும் அதற்கு நான் பதிலளிக்கவேண்டி ஏற்பட்ட நிர்ப்பந்தமும் திரு. நவரத்தினம்அவர்களுக்குநினைவில் இருக்கும் என்று நம்புகிறேன். அந்தப்பேச்சின்பின் கட்டுப்பாடுள்ள கட்சியான எந்த அரசியல் இயக்கமும் அவரைத் தன் அணியில் தொடர்ந்து உறுப்பினராக வைத்திருக்க முடியாத நிலையை அவர் வேண்டுமென்றே ஏற்படுத்தினார். அதன்பின்பு தந்தை செல்வநாயகம் அவர்களை மிக மோசமாக எதிர்த்துத் தாக்கிய திரு. நவரத்தினம் அவர்கள் இன்று என்னைத் திட்டுவதைப்பற்றி நான்ஆச்சரியப்படவில்லை. அவருக்கு என் மீதுள்ள கோபத்தின் காரணம் அவருடைய அறிக்கையிலேயே தெரிகின்றது. அவருடைய அறிக்கையில் "சாதனைபுரிந்து தமிழ்மக்களின் விடுதலை காண்போம் என்று அமிர்தலிங்கத்திடம் கேட்டேன். மறுத்துவிட்டார். மக்களைப்பார்த்து சந்தர்ப்பம் தாருங்கள் என்று கேட்டேன். கொடுக்காதீர்கள் என்று மறித்துவிட்டார் திரு. அமிர்தலிங்கம்" என்ற கூற்று திரு. நவரத்தினம் அவர்கள் என்மீது கொண்டிருக்கும் கோபத்தின் காரணத்தை வெளிப்படையாகக் கூறுகின்றது

அவரை அரசியலிலிருந்து ஒதுக்கி மக்கள் அளித்த தீர்ப்புக்கு நான் பொறுப்பு என்று அவர் நினைக்கின்றார். அதனால் விரக்தியையும் ஆத்திரத்தையும் காட்டுவதற்கு இந்தச்சந்தர்ப்பத்தை அவர்பயன்படுத்தி இருக்கின்றார். திரு. இராசதுரை அவர்கள் போன்றோர் நடத்தும் அரசியல் நேர்மையானது என்று கூறும் திரு. நவரத்தினம் அவர்கள் தமது சிந்தனையைக் குழம்பவிட்டிருப்பதைக்கண்டு நான் அவருக்காக இரக்கப்படுகின்றேன்.

1957-ம் ஆண்டிலும் 1958-ம் ஆண்டிலும் நடந்த சம்பவங்கள் பற்றி அவருடைய அறிக்கை முழுவதும் உண்மைக்கு மாறான செய்திகளைக் கொண்டிருக்கின்றது



1957-ம் ஆண்டு ஜூலை மாதம் 26-ம் திகதி பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தம் கையெழுத்தானது அதைத் தொடர்ந்து மட்டக்களப்பில் கட்சியின் மகாநாடு நடைபெற்றது. மகாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சியாகநடைபெற்றவிஷயாலோசனைக்குழுக் கூட்டத்தில் அந்த ஒப்பந்தத்தின் குறைபாடுகளை எடுத்துக் கூறி அதை நிராகரித்துப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று நான் வாதாடியதையும் தந்தை செல்வநாயகம், அமரர் வன்னியசிங்கம் ஆகியோர் ஒரு இரவு முழுவதும் எனக்கு சமாதானங்களை எடுத்துக் கூறியதையும் திரு. நவரத்தினம் அவர்கள் மறந்திருந்தால் அதற்கு ஒருவேளை முதுமை காரணமாக இருக்கலாம் அப்படி நான் ஒப்பந்தத்தை எதிர்த்த போதிலும் விஷயாலோசனைக் குழு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று தீர்மானித்த பின் தந்தை செல்வநாயகம் அவர்களது கட்டளைப்படி அந்த தீர்மானத்தை கட்டுப்பாடுள்ள

ஒரு ஊழியனாக நானே மகாநாட்டில் பிரேரித்தேன் என்பதையும் அதன் பின்பு எனது தனிப்பட்ட கருத்துக்களை ஒதுக்கி வைத்து கட்சியின் கருத்தையே என் கருத்தாக ஏற்று செயல் பட்டேன் என்பதையும் இன்றைய இளைஞர்களுக்கு விளக்கும் பொருட்டே நான் இந்த சம்பவத்தை தந்தை செல்வநாயகம் அவர்களது பிறந்த தினக் கூட்டத்தில் குறிப்பிட்டேன். இந்த விஷயத்தில் தான் திரு, நவரத்தினம் அவர்களுக்கும் எனக்கும் வித்தியாசம் இருந்தது. எச்சந்தர்ப்பத்திலும் நான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் என்று திருபிக்கும் போக்கு என்னிடம் இருந்ததில்லை. இதற்கு மாறாக திரு. நவரத்தினம் அவர்கள் 1962-ம் ஆண்டு நடைபெற்ற மன்னார் மகாநாட்டில் தன் கருத்தைக் கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை என்று கட்சிக்கு மாறாக அறிக்கை விட்டுக் கட்சியிலிருந்து வெளியேறியதும் பின்பு திரு: வி.ஏ. கந்தையா அவர்கள் காலமானபோது கட்சிக்குத்திரும்ப வந்து ஊர்காவற்றுறைத் தொகுதி உறுப்பினரானதும் 1968-ம் ஆண்டில் மீண்டும் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி நடந்ததும் சரித்திர உண்மைகளாகும்

### ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம்

1958-ம் ஆண்டு நடந்த ஸ்ரீ எதிர்ப்பு இயக்கத்தைப் பற்றியும் திரு. நவரத்தினம் அவர்கள் ஞாபகமறதியாக பல தவறுகளை விட்டு இருக்கின்றார். 1958-ம் ஆண்டு மாசிமாதம் வரையில் பண்டாரநாயக்க செல்வநாயகம் ஒப்பந்தம் அமுல் நடத்தப் படாதது பற்றி கட்சியில் அதிருப்தி நிலவிக்கொண்டிருந்த நேரத்தில் அப்போது போக்குவரத்து அமைச்சராக இருந்த திரு. மைத்திரிபால சேனநாயக்க அவர்கள் சிங்கள ஸ்ரீ பொறித்த பஸ் வண்டிகளை வட மாகாணத்துக்கு அனுப்பினார் அதையொட்டி கொழும்பில் சைவ மங்கையர் கழகத்தில் நடந்த இலங்கை தமிழ்அரசுக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் அந்த விடயம் ஆராயப்பட்டது. அப்போது செயற்குழு தந்தை செல்வநாயகம் அவர்களின் கருத்துக்கு மாறாக அமரர் வன்னியசிங்கமும் நானும் முன்வைத்த கருத்தை ஏற்று அந்த பஸ்வண்டிகளில் உள்ள சிங்கள ஸ்ரீயை தமிழ் ஸ்ரீயாக மாற்றும் இயக்கத்தை நடத்த வேண்டும் என்று தீர்மானித்தது அதன்படி யாழ்ப்பாணம் பஸ் நிலயத்தில் முதல் அப்படி சிங்கள ஸ்ரீ எழுத்துக்களை மாற்றியவர் தந்தை செல்வநாயகம் என்பதை கட்சியில் இருந்த காலத்தில் எந்த நேரடி நடவடிக்கையிலும் தானாக ஈடுபடாது தூர நின்று பார்த்துவந்த திரு. நவரத்தினம் அவர்கள் மறந்திருக்கலாம். ஆனால் அப்படி மாற்றப்பட்ட தமிழ் ஸ்ரீ எழுத்துக்களோடு அந்த பஸ் வண்டிகள் சில நாட்கள் ஓடிவந்தன. அதன் பின்பு ஏப்ரல் மாதம் 8ம் திகதி புத்தரக்கித்த தேரோ தலைமையில் சத்தியாக்கிரகம் இருந்த புத்தபிக்குகளின் கோரிக்கைக்கு அடிபணிந்து காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா அவர்கள் ஒப்பந்தத்தைக்கிழித்து எறிவதாக உறுதி அளித்து அதைப் பாராளுமன்றத்திலும் வந்து அறிவித்தார். அதே நேரத்தில் தமிழ் ஸ்ரீ எழுத்தாக மாற்றப்பட்ட சிங்கள ஸ்ரீ இலக்கத் தகடுகள் மீண்டும் சிங்கள எழுத்தாக மாற்றப்படும் என்றும் அதை யாராவது மாற்ற முற்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பாராளுமன்றத்தில் அறிவித்தார். அடுத்தநாள் நாம் யாழ்ப்பாணம் திரும்பிவந்த போது அவர்கூறிய பிரகாரம் தமிழ் ஸ்ரீயாக இருந்த பஸ் வண்டிகளில் இலக்கத் தகடுகள் சிங்கள ஸ்ரீயாக மாற்றப்பட்டன. உடனடியாக அப்போது யாழ்ப்பாணத்தில் இருந்த இயக்கத் தலைவர்களை என்னுடைய வீட்டில் கூட்டி ஆலோசித்தபின் கொழும்புக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கட்சித் தலைவராக இருந்த அமரர் வன்னியசிங்கம் அவர்களின் அனுமதியையும் பெற்று நானும் செனேற்றர் நல்லையா அவர்களும் இன்று போஸ்ரனில் ஈழத் தமிழர் சங்கத்தின் தலைவராகப் பணிபுரியும் ஸ்ரீதரனும் பஸ் நிலயத்திற்குச் சென்று ஏப்ரல் மாதம் 10ம் திகதி சிங்கள ஸ்ரீயைத் தமிழ் ஸ்ரீயாக மாற்றினோம். மாற்றிய உடன் நாம் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலயம் கொண்டுசெல்லப்பட்டோம். இதையொட்டி அன்று அமரர் நாகநாதன் அவர்கள் பிரதமர் பண்டாரநாயக்காவின் சவாலுக்கு தகுந்த பதிலை திரு அமிர்தலிங்கம் கொடுத்திருக்கின்றார் என்று பத்திரிகைகளுக்குவிட்ட அறிக்கையை திரு நவரத்தினம் அவர்கள் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இதைமறந்து கட்சி மேலிடத்தை மேவாமல் நான் நடந்ததாகவும் அதன் பின்னர் தான் பண்டாரநாயக்கா அவர்கள் ஒப்பந்தத்தை நிராகரித்ததாகவும் திரு நவரத்தினம் அவர்கள் கூறுவது முழுத்தவறென்பதை இங்கு சுட்டிக் காட்டவேண்டியது எமது கடமையாகின்றது.

சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் 1957ம் ஆண்டிலே ஆரம்பித்து வைக்கப்பட்டது பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தம்

[7ம் பக்கம் பார்க்க)

## வடக்குத் தெரியாத வடதாரகை

புங்குடுதீவு குறிகாட்டுவான் துறைமுகத்திலிருந்து நெடுந்தீவுக்குச் செல்லும் வடதாரகை படகில் அண்மையில் நெடுந்தீவுக்கு பயணமானேன். அன்றுமாலை மழைக் கோலமாயும் மப்பும் மந்தாரமாயும் இருந்தது. கடலில் எந்தவித மான மாற்றமும் தென்படவில்லை.

குறிகாட்டுவானிலிருந்து புறப்பட்ட படகு நெடுந்தீவுக் கரையை நெருங்கிக் கொண்டிருந்த பொழுது திடீரென கடும் மழை பெய்ததுடன் காற்றும் வீசியது. கடலும் கொந்தளித்தது கண்ணுக்குத் தெரிந்த கரை தெரியாதபடி மழையும் இருட்டும் மறைத்தன. கொந்தளித்த கடலில் படகு தத்தளித்தது அலைகளால் அலைக்கப்பட்டு நீரோட்டத்துடன் திசைமாறி இழுபட்டது அபாயத்தின் அறிகுறிகள் பயணிகளுக்கு பயத்தைக் கொடுத்தன.

பிரயாணிகள் தம்வசமிழந்து கூக்குரல் போட்டார்கள். நிலைமை என்னவாகு மென்று விசாரித்தேன். பயப்படத் தேவையில்லை என்றார் சாரதி திசைபறி கருவியைத் தேடினேன். காணவில்லை. சாதியிடம் கேட்டபோது அப்படி ஒன்றும் இதில் இல்லை என்றார். தொடர்ந்து கதைத்து அவரைக் குழப்பாமல் அபாயத்திலிருந்து எங்களைக் காப்பாற்ற ஆண்டவனை வேண்டி நின்றேன்.

கிட்டத்தட்ட அரைமணி நேரம் போராடியதற்குப் பின்பு மழையும் சிறிது குறைய படகும் நெடுந்தீவுத் துறையில் கரைசேர்ந்தது

வடதாரகைப்படகில் "இது உங்கள் பொருள் பாதுகாப்பது உங்கள் கடமை" என ஒரு வாசகம் எழுதப்பட்டிருக்கிறது. பிரயாணிகளின் உயிரைக் காப்பாற்ற வேண்டிய திசையறி கருவி இல்லாத படகில் பிரயாணிகளுக்கு கடமையை நினைவூட்டும் சேவையாளர்கள் தங்கள் கடமைமை சரியாக செய்யவேண்டாமா?

ஈழத்துச் சிவானந்தன்
புங்குடுதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "செல்வா நினைவாலய காணி

## மண்நிரப்பும் பணிக்கு உதவுக'

### சனசமூக நிலையங்களிடம் யாழ். மேயர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் நினைவாலயக் காணிக்கு மண் நிரப்பும் பணிக்கு உதவுமாறு யாழ் மாநகர எல்லைக்குள் இருக்கும் சனசமூகநிலைய நிர்வாகிகளை யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ் மாநகர எல்லைக்குள் இருக்கும் சனசமூக நிலையத் தலைவர்கள், செயலாளர்களுக்கான மாநாடு அண்மையில் நடைபெற்றது. மாநாட்டின் பின்னர் திரு. விசுவநாதன் வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"நினைவாலயத் திறப்பு விழாவையொட்டி யாழ்நகர் விழாக்கோலம் பூணவேண்டும். அதனையும் சாதனையாக்கித் தருவது உங்கள் பணி. மக்கள் தலைவனை மக்கள் எவ்வாறு மதிக்கிறார்கள் என்பதை உலகம் உன்னிப்பாகக் கவனிக்கும். சொந்த நாட்டுத் தலைவர்களை, பெரியார்களை மதிக்கத் தெரியாத சமூகம் என்ற மதிப்பீட்டுக்கு உலகம் வராதிருக்கப் பார்த்துக் கொள்ளுவோம். அண்ணா அமரத்துவம் எய்தியபின் அண்ணாவுக்காகச் சென்னை மரினா கடற்கரையில் நிறுவப்பட்டுள்ள நினைவாலயத்தை மக்கள் எவ்வாறு மதிக்கிறார்கள், போற்றிவருகிறார்கள் என்பதை நன்கு அறிந்துள்ள நாம் அதற்கு அமைய தந்தை செல்வா நினைவாலயத்தையும் மதித்துப் போற்றத் தலைப்படுவோம். இதனால் தலைவர்களை மதிக்கத் தெரிந்த மக்கள் என்ற பெருமை எம்மைச் சேரும்.

தந்தை செல்வா நினைவாலயத் திறப்புவிழா நாளன்றும், அதனை அடுத்துவரும் இரு நாட்களும் உங்கள் உங்கள் பகுதிகளை அலங்காரமாகவும், துப்பரவாகவும் வைத்திருக்கும்படி உங்கள் ஊடாகப் பொதுமக்களையும், சிறப்பாக வர்த்தகப் பெருமக்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தந்தையின் படங்கள் ஆங்காங்கே காணப்படுவதும் விரும்பத்தக்கதே. ஆயினும் நினைவாலயக் காணிக்கு மண், மக்கி, மணல் ஆகியனவற்றை அளிப்பதே முதற் கடமையாக இருக்கட்டும். பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு நினைவு மண்டபத்தைக் கட்டி யெழுப்புவதற்கு அதன் நிர்மாண வேலைகளில் இவை அனைத்தும் இருந்து மக்கள் சிரமதானப் பணிகளை மேற்கொண்டதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆட்சியில் அரசுக் கட்டிலில் இருந்தவர் பண்டாரநாயக்கா அவரைப் போன்று குடையும், கொற்றமும் இல்லாதவராக இருந்தாலும், மக்களால் பூசிக்கப்படும் பெருந் தலைவராகத் தந்தை செல்வா இருந்தாரென்பது வரலாற்றில் பொறிக்கப்படும்படியாகச் செயலாற்ற அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன். இறந்த நாளில் சோடனையா என்று கேள்வி எழவேண்டியதில்லை. காரணம் தந்தை இறந்திலர், அமரத்துவம் எய்தியவர். மேலும் நடைபெறவிருப்பது நினைவாலயத் திறப்புவிழா. அது கோலாகலமாக இடம்பெறப் பார்த்துக்கொள்வோம். (கு)

## நகரமுதல்வரும் நீதிபதியும் பரிமாறிய வாழ்த்துக்கள்

(யாழ்ப்பாணம்)

புத்தாண்டையொட்டி யாழ் மாநகரமுதல்வர் திரு. இராஜா விஸ்வநாதனும் [illegible] யாழ். குடும்ப நீதிமன்ற நீதிபதி திரு. எம். டி. ஜேசுரத்தினத்துக்கும், பாரியாருக்கும், அனுப்பிய வாழ்த்தும், குடும்ப நீதிமன்ற நீதிபதி திரு. எம். டி. ஜேசுரத்தினமும் பாரியாரும் யாழ் மாநகர முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதனுக்கும் பாரியாருக்கும் அனுப்பிய பதில் வாழ்த்தும் வாசகர்கள் படித்து ரசிப்பதற்காக கீழே தருகின்றோம்.

யாழ் மாநகர முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதனும் பாரியாரும் அனுப்பிய வாழ்த்து:

வீர சுதந்திர புருஷராய் வீறுபெற்ற மனிதராய்
ஊழல் அற்ற மூகராய் உள்ளம் தூய சீலராய்
இலஞ்சமென்ற பேய்தனை நஞ்சதென நினைத்திடும்
நெஞ்சமற்ற தூயராய் வாழ்வோம் இந்த நாட்டிலே

யாழ். குடும்ப நீதிமன்ற நீதிபதி திரு. எம். டி. ஜேசுரத்தினமும் பாரியாரும் அனுப்பிய பதில் வாழ்த்து.

"பள்ளமில்லா வீதியில் மக்கள் நடமாடவும்
வாகனங்கள் ஓடவும்
நாற்றமின்றி கான்களில் கழிவு நீர்கள் ஓடவும்
நுழம்புத் தொல்லை இன்றியே இனிய துயில்
கொள்ளவும்
வசதிகள் பலவும் பெற்று வாழ்வோம் இந்த
நகரிலே

## 'மக்களநம்பிக்கை வீண்போகாது

# செயற்படும் எம். பிக்களுக்கு ஒய்வு நேரமே கிடையாது"

### -- இராசலிங்கம் எம். பி

[நெல்லியடி]

"பாராளுமன்ற உறுப்பினர்கள் கடமைத் தெரிவுசெய்த மக்களின் நம்பிக்கை வீண் போகாத விதத்தில் செயல்பட வேண்டும். இந்நோக்கம் கருதி செயற்படும் உறுப்பினர்களுக்கு ஓய்வுநேரமே கிடையாது."

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம், வதிரி பூவற்கரை பிள்ளையார் ஆலயத்தடியில், மின்னொளி ஏற்று வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

சைவப்புலவர் திரு சி. வல்லிபுரம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"மக்கள் தமது தேவையை நாம் நிறைவேற்றுவோம் எனக் கருதியே எம்மைத் தெரிவு செய்கின்றார்கள். இக்கருத்து தவறானது அல்ல; ஆனால் இனிக்கட்பேசி ஏமாற்றுவது, காலந்தாழ்த்துவது தான் தவறானதாகும்.

ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வுக்காகவே, அவர்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்காகவே நான் பதவியை உபயோகிடுகின்றேன். இதனைவிடுத்து பதவிக்காக சமூகத்தை ஏமாற்றி, பசலி வாழ்க்கை வாழ நான் விரும்பவில்லை.

"நான் சார்ந்த இயக்கம் சாதி அடக்குமுறையை இல்லாதொழிக்க பாடுபடுகின்றது. கட்சியினுள்ளேயிருந்து நானும் போராடிக் கொண்டுதானிக்கின்றேன். எனது இயக்கத்தில், எந்த இலட்சியத்திற்காகச் சேர்ந்தேனோ அந்த இலட்சியத்தை இயக்கம் கைவிட்டால், அடுத்த நிமிடமே இயக்கத்தை உதறி எறிந்து வெளியேறிவிடுவேன்" என்றார்.

நெல்லியடி பட்டினசபைச் செயலாளர் திரு வி. இராமச்சந்திரன், ஆசிரியர்கள், எஸ். சதானந்தன, எ. இரத்தின சபாபதி விசேட ஆணையாளர் பி. எம். ஜோசப் ஆகியோரும் உரையாற்றினர்கள். (ம)

# கூட்டணிப் பத்திரிகைக்கு ஆசிரியர் காசி ஆனந்தன்?

(மட்டக்களப்பு)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் உத்தியோகபூர்வ பத்திரிகையாக வெளிவரவுள்ள புதிய பத்திரிகைக்கு ஆசிரியராக திரு. காசியானந்தன் நியமிக்கப்படலாம் என தெரிய வருகிறது.

திரு காசியானந்தன் குடும்பத்திற்கு வருமானம் பெறக்கூடிய வசதியை கூட்டணியினர் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென அவரது ஆதரவாளர்கள் தலைமைபீடத்திடம் கோரியுள்ளனர்.

திரு காசியானந்தன் புதிய பத்திரிகை வெளியிடுவது தொடர்பாக கூட்டணி நியமித்த குழுவில் ஒருவராக இருக்கிறார்.

சிறந்த எழுத்தாளராக இவரே பத்திரிகைஆசிரியர் பதவிக்கு பொருத்தமானவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அவரே நியமிக்கப்படலாம் எனத்தெரிய வருகிறது

## அடையாள அணிவகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி கொலை தொடர்பான அணிவகுப்பு இம்மாதம் 25-ந் திகதிக்குப் பின் போடப்பட்டுள்ளது. (க)

# அகில இலங்கை சைவமகாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் வருடந்தோறும் நடத்தப்படும் அகில இலங்கைசைவ மாநாடு மே30-திகதி முதல் ஜூன் முதந்திகதி வரை 3 நாட்கள் நடைபெறும். விசேட கருத்துரை-விரிவுரை வழங்குவதற்கு சென்னைப் பல்கலைக்கழக மெய்யியற் பேராசிரியர் டாக்டர் [illegible] வை, இரத்தினசபாபதியை அழைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சமயக் கருத்தரங்கு, பண்ணிசை, விரிவுரைகள் என்பனவும் நடைபெறுவதற்கான ஒழுங்குகளை மகாநாட்டு அமைப்பாளர் சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி கவனித்து வருகின்றார்.

"தமிழரசுக் கட்சியைப் புனரமைப்பது

# இனத்தின் ஒற்றுமையை குலைக்கும் முயற்சி"

(உடுப்பிட்டி)

தமிழரசுக்கட்சியைப் புனரமைக்கப்படவேண்டும் என்று குரல் எழுப்புவது தமிழ் இனத்தின் ஒற்றுமையைக் குலைக்க எடுக்கும் முயற்சியாகும் இதற்கு தமிழ்மக்கள் ஒருபோதும் இடமளிக்கக்கூடாது."

இவ்வாறு உடுப்பிட்டித் தொகுதி தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை உறுப்பினருமான திரு. எஸ். செந்துராசா விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்,

அண்மையில் நடைபெற்ற உடுப்பிட்டி கூட்டணிக்கிளைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பிரஸ்தாப அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

மீண்டும் எம்மிடையே கட்சி அடிப்படையில் பிளவுகளை ஏற்படுத்தி எமது விடுதலையைப் பின்தள்ளிவைக்க முயலக்கூடாது. ஆனாலும் தமிழர் விடுதலைக் கூட்டணி இயங்காதிருக்கும் வேளைகளில் அவர்கள் தட்டிக்கேட்பதையிட்டு நாம் வரவேற்கின்றோம். ஆனால் கூட்டணியைப் பிளவுபடுத்த எவருக்கும் உரிமையில்லை. இதனால் இனத்தின் ஒற்றுமை பின்தள்ளப்பட்டுவிடும்." (-)

# 'கூட்டணியுடன் இணைந்தே மேதினம் கொண்டாடும்'

## இளைஞர் பேரவைநிலைபற்றி அறிக்கை

(மட்டக்களப்பு)

"தமிழ் இளைஞர் பேரவையின் மத்திய செயற்குழுவின் தீர்மானப்படியே மே தினக் கொண்டாட்டங்களை தமிழ் இளைஞர் பேரவை கொண்டாடும்.

இவ்வாறு பேரவை அமைப்புச் செயலாளர் திரு இராவாசு [illegible] வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

மேதினக் கொண்டாட்டத்தைப் பற்றி தமிழ் இளைஞர் [illegible] இடதுசாரி இயக்கங்களுடனும் [illegible] பேச்சுவார்த்தை நடத்தவில்லை.

பேரவையின் மத்திய செயற்குழு மட்டக்களப்பில் கூடிய போது எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மலையகம் ஆகிய இடங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியினருடனும் தமிழ்த் தொழிற் சங்கத்துடனும் இணைந்து கொண்டாடும் என்பதை பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன் என்று அச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

## சாந்தை மாதிரிக்கிராமம்

(சித்தன்கேணி)

இலங்கையின் பலதொகுதிகளிலும் அமைக்கப்பட்டுவரும் மாதிரிக்கிராமங்கள்போல் வட்டுக்கோட்டைத் தொகுதியில் உள்ள சாந்தையிலும் மாதிரிக் கிராமம் அமைப்பதற்கு உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு ஆய்வு வேலை நடத்தியிருந்தது ஆனாலும் இவ்வேலைகள் அண்மைக் காலமாகத் தடைப்பட்டிருந்ததை வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு சுட்டிக்காட்டி, உள்ளூராட்சி உதவி வீடமைப்பு ஆணையாளருக்குக் கடிதம் எழுதியதைத் தொடர்ந்து உள்ளூராட்சி உதவி ஆணையாளர் விரைவில் [illegible] ஆரம்பிக்கப்படும் என்று [illegible] அறிவித்துள்ளார்.

## இராசமாணிக்கத்திற்கு முழு அளவில் சிலை

(மட்டக்களப்பு)

பட்டிருப்புத் தொகுதி முன்னாள் எம்.பி.யும் தமிழரசுக் கட்சியின் நீண்டகால உறுப்பினருமான காலஞ்சென்ற அமரர் சி. மு. இராசமாணிக்கத்தின் முழு உருவச்சிலை ஒன்று பட்டிருப்புத் தொகுதியிலுள்ள களுவாஞ்சிக்குடி என்னுமிடத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கிளையினரால் நிறுவப்படவுள்ளது.

இச் சிலை நிறுவுவதற்கான ஏற்பாடுகளை பட்டிருப்பு எம். பி. திரு. பூ. கணேசலிங்கம் தீவிரமாக மேற்கொண்டுவருகிறார். இச் சிலை நிறுவுவதற்கானகுழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது இக் குழுவினர் பட்டிருப்பு தொகுதியிலுள்ள கிராமந்தோறும் சென்று நிதி சேகரிக்கும் பணியில் ஈடுபடுவார்கள். (கு)

இறிஸ்தவ சேவா

## ஆசிரியர் சகாயநிதி சங்கம்

(அரியாலை)

கிறிஸ்த சேவா ஆசிரியர் சகாயநிதிச்சங்கத்தின் 26-வது வருடாந்தப் பொதுக்கூட்டம், சங்கப்பணிமனையில் தலைவர் திரு. த. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது. புதிய வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. த. சண்முகநாதன், உப தலைவர்கள் திருவாளர்கள் எஸ். பி. ஜீவானந்தம், எஸ். வேலாயுதபிள்ளையும், செயலாளர் திரு. எஸ். பி. வில்வராசா, உப செயலாளர் திரு. இ. சரசானந்தவேல், பொருளாளர் திரு. ந. சிவபாதம், நிர்வாக சபை உறுப்பினர்கள் திருவாளர்கள் ப. க. ஆறுமுகம், அ. கி. மனுவேல்பிள்ளை, த. துரைசிங்கம், ச. கி. புண்ணியலிங்கம், சு. விசுவலிங்கம், ஆர். ஜெநவரத்தினம், ஆ. நடராசா, சி. சிவலிங்கம், வ. க. பாலசுப்பிரமணியம் தெரிவுசெய்யப்பட்டனர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி - சுஜாதா
தீ ப ம்
(கலர் - புதியபிரதி)

வெஸ்லி
(சாவகச்சேரி)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.-லதா
ஊருக்கு
உழைப்பவன்
(புதிய பிரதி)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)
அகில இலங்கை அரசினர் பாடசாலை கல்வி நிறுவனங்கள் ஊழியர் சங்க வடபிரதேசக் கிளையின் 15வது வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 20ம் திகதி ஞாயிறு காலை யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (கு)

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்
(இரு வேடம்)
பட்டிக்காட்டு ராஜா
(புதிய பிரதி)(கலர்)

## கூட்டணி செயற்குழு மே 3ல் கூடும்

(யாழ்ப்பாணம்)
தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டம் மே மாதம் 3-ம், 4-ம் திகதிகளில் மட்டக்களப்பில் நடைபெறவிருப்பதாக கூட்டணி அமைப்பு நிர்வாகச் செயலாளர் திரு. கா பொ. இரத்தினம் எம். பி. தெரிவித்தார்.

மத்திய செயற்குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து மே மாதமே பொதுச்சபைக் கூட்டமும் கூட்டப்படலாம் என்று தெரியவருகிறது. (கு)

5th CROWDED WEEK
REGAL JAFFNA: Phone: 380
Daily 4 shows
Daily at 3-00, 4-30, 7-00 & 9-30 p.m.
ROGER MOORE as JAMES BOND
LIVE AND LET DIE
(More suited for Adults)

ராஜா - (யாழ்நகர்) கடைசி 3 தினங்கள்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-கவிதா-சந்திரமோகன்
நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்

வெலிங்டன் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) 10-30, 2-30 6-30, 9-30
சிவாஜி-சரோஜாதேவி- எம். ஆர். ராதா நடித்த
பாகப் பிரிவினை

லிடோ தினசரி 10-30, 2-30, 4-45, 7-15 & 9-30
(யாழ்.நகர்) போன்: 7898
DIAMONDS

ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
ஸ்ரீகாந்த், மலேசியா சிவாஜி ராஜா, டீன்குமார்
நடித்த
நெஞ்சுக்கு நீதி
இது ஒரு இலங்கை - இந்திய - மலேசிய கூட்டுத் தயாரிப்பு

மனோஹரா யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - உஷாநந்தினி
ராஜபார்ட் ரங்கதுரை
(ஈஸ்ட்மன் கலர்—புதிய பிரதி)

வின்ஸர் தொலைபேசி: 466
(யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
தினசரி 10-30, 1-30, 4-30, 7-15 10-30
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி
மற்றும்பலர் நடித்த
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணப்படம்)

இன்னும் சில தினங்கள் மட்டும்
சாந்தி யாழ் நகர் போன்: 7642.
தினசரி 10-30,2-30, 6-30, 9-45.
ராஜேஷ் கன்னா (இரட்டைவேடம்), சர்மிலாதாகூர்
"டாஹ்" ஹிந்தி
ஈஸ்ட்மன் கலர்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
● ஜெய்சங்கர் ● அசோகன் ● நாகேஷ் ● ராதிகா ● ஜெயச்சந்திரன்
● தர்மலிங்கம் ● டிங்கிரி கனகரத்தினம் ● V. R. ஸ்ரீ நடராஜா
● விஜயதீபன் ● கீதா ● அனோஜா ஆகியோர் தோன்றும்
ரத்தத்தின் ரத்தமே
பிறைட்டன் பிலிம்ஸ்
டைரக்ஷன்: ஜோ தேவ ஆனந்த்

## யாழ். ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)
கையெழுத்தானபின் அது நிறுத்திவைக்கப்பட்டதும் 1958ம் ஆண்டு மார்ச் மாதத்தில் சிங்கள ஸ்ரீ பஸ்வண்டிகள் தமிழ்ப்பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து செயற்குழுவின் தீர்மானப்படி தந்தை செல்வநாயகம் அவர்களே மீண்டும் சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்ததும் புத்தபிக்குகளின் சத்தியாக்கிரகத்தைத் தொடர்ந்து பிரதமர் பண்டாரநாயக்கா அவர்கள் ஒப்பந்தத்தை நிராகரித்ததும் அதன்பின் மீண்டும் சிங்கள ஸ்ரீ எதிர்ப்பைத் தீவிரப்படுத்தி நூற்றுக்கணக்கான தொண்டர்கள் சிறை சென்றதும் இப்படியான இயக்கங்களில் ஈடுபடாமல் கொழும்பில் இருந்த திரு. நவரத்தினம் அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் இவை சரித்திரத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் என்பதை மக்கள் அறிந்துகொள்வர்.

### கிழக்கின் நிலைமை

திரு. நவரத்தினம் அவர்களுடைய நண்பர் திரு. இராசதுரை, அவரைப் போலவே கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட காரணத்தினால் வடக்கு மாகாணத்திற்கும் கிழக்கு மாகாணத்திற்கும் தந்தை செல்வநாயகம் அவர்கள் ஏற்படுத்திய இணைப்பு தகர்ந்துவிட்டதாக திரு. நவரத்தினமும் அவரது நண்பர் திரு. இராசதுரையும் கனவு காணலாம். 1968ம் ஆண்டில் கட்சியில்இருந்து வெளியேறிய பின் திரு. நவரத்தினம் கிழக்கு மாகாணம் போய்இருக்கமாட்டார். அதனால்தான் அவர் இப்படிக் கூறுகின்றார். ஆனால் வடக்கிற்கும் கிழக்கிற்கும் ஏற்பட்ட இணைப்பு முன்னெப்பொழுதையும்விட இப்பொழுது இறுக்கமாக நிலவுகின்றது என்பதை மக்கள் அறிவர்.

சேருவாவிலைத் தொகுதியை நாம் ஏற்படுத்தினோம் என்று திரு. நவரத்தினம் கூறுகின்றார். தேர்தல் நிர்ணயக் குழுமுன் நாம் சமர்ப்பித்த திட்டத்தில் அன்றைய மூதூர் தொகுதியோடு கல்குடாத் தொகுதியில் ஒரு பகுதியையும் சேர்த்து மூன்று உறுப்பினர்கள் தெரிவாகும் தொகுதியொன்று உருவாக்கப்பட வேண்டுமென்று நாம் விடுத்த கோரிக்கையை திரு. நவரத்தினம் அறியமாட்டார் போலும். நாம் விரும்பினால் என்ன விரும்பாவிட்டால் என்ன ஆட்சியாளர் அங்கு வாழும் சிங்கள மக்களுக்கு ஒரு தேர்தல் தொகுதியை ஏற்படுத்திக் கொடுத்திருப்பார்கள் என்பது அரசியல் யதார்த்தமாகும்.

இறுதியில் கல்கியின் புத்திமதியை நாம் ஏற்றுக்கொண்டதாகக் கூறும் திரு. நவரத்தினம் அதை ஏற்றுக்கொண்டவர் அவரது நண்பர் திரு. இராசதுரையே அன்றி நாம் அல்ல என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். எத்தனையோ நெருக்கடிகளுக்குமத்தியில் தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற சாத்தியமான நடவடிக்கைகளை எல்லாம் தமிழர் விடுதலைக் கூட்டணி எடுத்துவருகின்றது. எமது பொறுப்பை எந்தக் கட்டத்திலும் தட்டிக்கழித்துப் பதுங்கி வாழவோ பின்வாங்கிச் செல்லவோ நாம் முற்பட்டவர் அல்ல என்பதை மக்கள் அறிவார்கள். ஒரு புறத்தில் திரு. நவரத்தினம் என்மீது விஷத்தைக் கக்கலாம். மறுபுறத்தில் அமைச்சர் திரு. சிறில் மத்தியூ போன்றோர் என்னையும் எனது மனைவியையும் வையலாம். இன்னொரு புறத்தில் ஆணைக் குழுக்களின்முன் பொலிசாரே என்மீது அபாண்டங்களைச் சுமத்தலாம். தூற்றுபவர் போற்றட்டும். புழுதி வாரித் தூற்றுபவர் தூற்றட்டும். தந்தை செல்வநாயகம் அவர்கள் எமக்குவிட்டுச் சென்ற பணியை தமிழ் மக்கள் எமக்குக் கொடுத்துள்ள பொறுப்பை நாம் நிறைவேற்றத் தவறமாட்டோம் என்பதை உறுதியாகக் கூறவிரும்புகிறேன்.

வயாவிளான் ச. ச. நி. நடாத்தும்

## மின்னொளியில் கரபந்தாட்ட சுற்றுப் போட்டி

(பலாலி)
வயாவிளான் ஞானவைரவர் சனசமூக நிலையம் நடாத்தும் அமரர் செல்லப்பா குமாரசாமி ஞாபகார்த்தக் கேடயத்திற்கான மின்னொளி கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 2-ம் சுற்று ஆட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இன்றைய ஓவர்-கேம் 6 வீரர் ஆட்டத்தில் ஆழியவளை-சக்திவேல் வி. க வை எதிர்த்து இமையாணன் 'பி'யும் நீர்வேலி-அண்ணா வி. க. வை எதிர்த்து வயாவிளான் - மின்மீன் மன்றமும் போட்டியிடும். இப்போட்டிகளில் தெரிவாகும் இரு கோஷ்டிகளும் இரவு 9-00 மணிப் போட்டியில் கலந்துகொள்ளும்.

ஓவர்-கேம் 4 வீரர் ஆட்டத்தில் ஏழாலை ஸ்ரீ முருகன் வி. க.வை எதிர்த்து இமையாணன் இளைஞர் 'பி'யும், காங்கேசன்துறை ஐக்கிய கழக 'பி'யை எதிர்த்து ஏழாலை முத்தமிழ் மன்றமும் போட்டியிடும். இவ்விரு போட்டிகளிலும் தெரிவு செய்யப்படும் கோஷ்டிகள் இரவு 9-30மணிப் போட்டியில் மோதும்.

### சில போட்டி முடிவுகள்

ஓவர்-கேம் 6 வீரர் போட்டியில் உடுப்பிட்டி - நவஜீவன் A கழகம் ஆனையிறவு தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தையும், தெல்லிப்பளை வீனஸ் வி. க. மயிலிட்டி பூமகள் A யையும் வென்றுள்ளது. 4 வீரர் போட்டியில் ஆனையிறவு தேசிய உப்புக்கூட்டுத்தாபனத்தை, உடுப்பிட்டி- நவஜீவன்ஸ் கழகம் வெற்றி பெற்றுள்ளது. திரு. எம். ஜெகநாதன் இப்போட்டிகளுக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

உடுப்பிட்டி நவஜீவன்ஸ் 'ஏ' கழகத்திற்கும் தெல்லிப்பளை - வீனஸ் கழகத்திற்குமிடையிலான 6 வீரர் போட்டியில் வீனஸ் வெற்றி பெற்று கால் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. 4 வீரர் போட்டியில் மயிலிட்டி - பூமகள் 'ஏ' கழகத்தை, உடுப்பிட்டி - நவஜீவன்ஸ் 'பி' கழகம் தோற்கடித்தது. மத்தியஸ்தராக திரு. எம். பத்மநாதன் கடமையாற்றினார்.

உடுப்பிட்டி - நவஜீவன்ஸ் 'பி' கழகம் 4 வீரர் போட்டியில் தையிட்டி ஸ்ரார் கழகத்தையும், வவுனியா விவேகானந்தா வி கழகத்தையும் வெற்றி கொண்டதுடன், 6 வீரர் போட்டியிலும் தையிட்டி ஸ்ரார் கழகத்தையும், தொடர்ந்து வவுனியா விவேகானந்தா வி. கழகத்தையும் வெற்றிபெற்றுள்ளது. இப்போட்டிகளுக்கு திரு. எம். ஜெகநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

யாழ்ப்பாணம் - வடபிராந்திய போக்குவரத்துச் சபை வி. கழகம் ஓவர்-கேம் 6 வீரர் போட்டியில் சிறுப்பிட்டி -ஜனசக்தி 'பி' கழகத்தையும் ஓவர் கேம் 4 வீரர் போட்டியில் மயிலிட்டி பூமகள் 'பி' கழகத்தையும் செட்-அப் போட்டியில் இடைக்காடு சனசமூக நிலையத்தையும் வெற்றி கொண்டு சகல போட்டிகளிலும் கால் இறுதி ஆட்டங்களுக்கும் தகுதி பெற்றுள்ளது. இப்போட்டிகளுக்கு திரு. எம். பத்மநாதன் கடமையாற்றினார். (ச)

## இளைஞர் வார விழா: விரிவான ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)
தேசிய இளைஞர் மன்றமும், யாழ்ப்பாண மாவட்ட அமைச்சும் இணைந்து நடாத்தும் இளைஞர் வாரவிழா அடுத்தமாதம் 19-ந் திகதி முதல் 24-ந் திகதி வரை, வெவ்வேறு நிகழ்ச்சிகளாக யாழ் மத்திய கல்லூரி மைதானத்திலும், யாழ்திறந்த வெளியரங்கிலும், யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கிலும் நடைபெறவுள்ளது.

இக் கொண்டாட்டங்களின் இறுதிநாள் நிகழ்ச்சிகளில், இளைஞர் விவகார, கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்கின்றார்.

முதல் நாள் நிகழ்ச்சிகளுக்கு யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோனும், இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளுக்கு, யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமியும், மூன்றும் நாள் நிகழ்ச்சிகளுக்கு, எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும், நான்காம் நாள் நிகழ்ச்சிகளுக்கு, வடபிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் திரு. பி. மகேந்திரனும், ஐந்தாம் நாள் நிகழ்ச்சிகளுக்கு, யாழ்ப்பாண பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனும் கலந்து கொள்வார்.

இவ்விழாவினையொட்டி, சீ. நோர் நிறுவனம், இலங்கை கைவினைக் கூட்டுத்தாபனம், த பீனன்ஸ் கம்பெனி, சின்னத்துரை பிறதர், யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம், பல விளையாட்டுப் போட்டிகளை ஒழுங்கு செய்துள்ளன. இவ்விழாவுக்கான சகல ஒழுங்குகளையும் தேசிய இளைஞர் மன்ற உத்தியோகத்தர் திரு. திருநீலகண்டன் செய்துள்ளார். (கெ)

## கல்விநிறுவன ஊழியர் சங்கம்

(உடுப்பிட்டி)
அகில இலங்கை அரசினர் பாடசாலை கல்வி நிறுவனங்கள் ஊழியர் சங்கத்தின் வடபிரதேசக் கிளையின் 15-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 20-ம் திகதி யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள...

டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல்மாடி.
264/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு The EELANAADU
50 சதம்

## அசம்பாவிதம் எதுவுமில்லை

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டம் எங்கும் அமைதியான முறையில் புது வருடக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன என்று யாழ். பொலிஸ் அதிபர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரியா தெரிவித்தார்.

புத்தாண்டு கொண்டாட்டங்களின்போது மாவட்டத்தின் எப்பகுதியிலும் அசம்பாவிதசம்பவங்கள் எதுவும் நிகழவில்லையென்றும் திரு. விக்கிரமசூரியா மகிழ்ச்சியுடன் தெரிவித் தெரிவித்தார்.

சிங்கள மொழித் தேர்ச்சி:

## விரைவில் பிரச்னைக்குதீர்வு!

### - பிரதி அமைச்சர்

(கொழும்பு)
புதிய அரசியலமைப்பின் பிரகாரமும் பொதுநிர்வாக அமைச்சின் 143ம் இலக்க சுற்றுநிருபத்தின்படியும் சிங்களத்தேர்ச்சி தேவைப்படாத அரசாங்க ஊழியர்களின் பதவிஉயர்வு, சம்பள உயர்வு ஆகியனபற்றி விரைவான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமென பிரதி பொதுநிர்வாக அமைச்சர் திரு. ஊரிந்திரகொரியா தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை எம். பி. திரு. கா. பொ. இரத்தினத்தின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே பாராளுமன்றத்தில் பிரதிஅமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இத்தகைய பாதிப்புக்குள்ளான ஊழியர்கள் பற்றிய விபரத்தையும் அமைச்சர் திரு. இரத்தினத்திடம் கோரினார். (ம)

பணயக்கைதிகளை மீட்க

# ஜெர்மன், இஸ்ரேலுடன் இணைந்து அமெரிக்கா இரகசியத் திட்டம்

பொன், ஏப். 14
ஈரான் மாணவர்கள் வசமுள்ள அமெரிக்கப் பணயக்கைதிகளை மீட்க இஸ்ரேல், மேற்கு ஜெர்மன் ஆகியநாடுகளுடன் இணைந்து இரகசியத் திட்டம் ஒன்றை அமெரிக்கா தீட்டியுள்ளது.

இத்தகவலை மேற்கு ஜெர்மன் பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ளது.

இந்த இரகசியத்திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் இன்னமும் ஓரிரு வாரங்களில் பணயக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டு விடுவார்கள் என்று அமெரிக்கா நம்புவதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

### கார்ட்டரில் அமெரிக்க மக்கள் அவநம்பிக்கை

இதே வேளையில் பணயக் கைதிகள் விவகாரம் தொடர்பாக அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் எடுத்துவரும் நடவடிக்கைகளில் அமெரிக்க மக்கள் அவநம்பிக்கை தெரிவித்துள்ளதாக அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்று தெரிவிக்கின்றது.

பணயக் கைதிகள் விவகாரம் தொடர்பான கார்ட்டரின் நடவடிக்கைகளைக் கடந்த டிசம்பரில் 77 வீதமான அமெரிக்கமக்கள் ஆதரித்து வந்தார்கள் என்றும் இப்போது 40 வீதமானவர்களே திரு. கார்ட்டருக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர் என்றும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. திரு. கார்ட்டரின் நடவடிக்கைகளுக்கு 49 வீதமானோர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். (இ)

## நெடுஞ்சாலைத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாக நாவாந்துறை நோக்கிச் செல்வது)

8. நல்லூர் ஒட்டுமடம் வீதி (அரசடி சந்தியிலிருந்து ஒட்டுமடம் நோக்கிச் செல்லும் வீதி)

9. யாழ்ப்பாணம் - செம்மணி வீதி (முத்திரை சந்தியிலிருந்து செம்மணி சந்தி வரை செல்லும் வீதி)

நெடுஞ்சாலை திணைக்களத்திற்குரிய இந்த 9 வீதிகளும் பிரதான வீதிகளென்றும் ஆதலால் மக்களின் நன்மை கருதி காலத்திற்குக் காலம் தாமதமின்றி திருத்தம்செய்யப்பட்டு வருவதாகவும் நெடுஞ்சாலை திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

கடந்த வருடம் அக்டோபரில் தார் தட்டுப்பாடு ஏற்பட்டதாகவும் தற்போது தட்டுப்பாடு நீங்கிவிட்டதாகவும் கொழும்பிலிருந்தே தார் பெற வேண்டியிருப்பதால் சில சமயங்களில் இவ் வீதிகளைத் திருத்துவதில் காலதாமதம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது (க-இ)

## கைவிசேஷம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போது காலமானவர் கணவருடன் மனஸ்தாபப்பட்டுக் கொண்டு கைவிசேஷம் வாங்க மறுத்ததாகவும் அதனையடுத்து மனமுடைந்த கணவர் மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு வெளியே போகப் புறப்பட்டபோது காலமானவர் ஓடிச்சென்று அங்கிருந்த நஞ்சை எடுத்து அருந்தியதாகவும் உடன் தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றதும் அவர் மரணமடைந்துவிட்டதாகவும் சாட்சியங்களில் தெரிவிக்கப்பட்டது.

தற்கொலை என தீர்ப்பளிக்கப்பட்டது.

காங்கேசன்துறைப் பொலிசார் சாட்சிகளை ஆஜர்செய்தனர்.

## பிரிட்டனில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதிப்புறுகிறார்கள் என்றும்- தற்போது பிரிட்டனில் கல்விபயிலும் 80 ஆயிரம் வெளிநாட்டு மாணவர்களில் 43 ஆயிரம் பேர் பிரிட்டனிடமிருந்து சுதந்திரமடைந்த 42 நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் மேற்படி கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

பொதுநலஅமைப்பு நாடுகள் ஸ்தாபனத்தின் பொதுச்செயலாளர் திரு. ரம்பால் தலைமையிலான குழு ஒன்று இவ் விவகாரம் தொடர்பாக பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சரைச் சந்தித்து பேச்சு நடத்தும் என இந் நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் கூறினார். (இ)

## வருடாந்த உற்சவம் இன்று

(யாழ்ப்பாணம்)
வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக பராமாசாரிய சுவாமிகள் தினமும் இரவு 'மகாபாரதம்' பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். (கொ-இ)

## பிரதி அமைச்சர் விஜயம்

(மன்னார்)
மன்னாருக்கு அண்மையில் விஜயஞ்செய்த பிரதி விவசாய அமைச்சர் திரு. சந்திரா பண்டார, மன்னார்க் கச்சேரியில் மாநாடொன்றை நடத்தினார்.

இம்மாநாட்டிற்கு மூதூர் எம். பி.யும், மன்னார்மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். ஈ. எச். மஹ்ரூப் தலைமைவகித்தார். மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன், மன்னார் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்னாண்டோ உட்படத் திணைக்கள அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

விவசாயஅபிவிருத்தி, பாசன திட்டங்கள்பற்றி பிரதிஅமைச்சருடன் அதிகாரிகள் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். மன்னார் மாவட்டத்திற்கு முக்கிய விவசாயத்தேவைகள் பற்றி மன்னார் எம்.பி. திரு. பி.எஸ். சூசைதாசன் எடுத்துக்கூறினார். (கு)

## மரண அறிவித்தல்

### சின்னையா இராமலிங்கம்

சின்னையா இராமலிங்கம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற அன்னமுத்துவின் அருமைக் கணவரும், செல்வராஜா (அதிபர், பூநகரி மகாவித்தியாலயம்), சண்முகம் (லேக்ஹவுஸ், கொழும்பு), லோகநாதன் (மேற்பார்வையாளர், சுகாதாரப்பகுதி, யாழ். மாநகரசபை), திருமதி க நல்லம்மா, திருமதி ந. தவமணி, திருமதி சு. சரஸ்வதி ஆகியோரின் அன்புத்தந்தையாரும், காலஞ்சென்ற சி. கந்தமுத்து (ஆசிரியர்), பொ. நடராஜா (முன்னாள் மா. ந. சபை அங்கத்தவர்), மு. சுப்பிரமணியர் (காணிப் பதிவுக்கந்தோர், யாழ்.) ஆகியோரின் அன்பு மாமனுமாவர்.

அன்னாரின் பூதவுடல் 15-4-80 இன்று காலை 10 மணிக்கு வில்லூன்டி மயானத்திற்கு தகனக்கிரிகைக்காக எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

72, பண்ணை வீதி, யாழ்ப்பாணம். 5481

## மரண அறிவித்தல்

### திருமதி வள்ளியம்மை சங்கரப்பிள்ளை

சங்கரப்பிள்ளை வள்ளியம்மை காலமானார். இவர் ஏ. எஸ். சங்கரப்பிள்ளை அன் சன்ஸ் (கொழும்பு, கண்டி, டம்புள்ள, கிளிநொச்சி) சங்கர் சன்ஸ் அச்சகம் ஆகியவற்றின் பங்காளரும், காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் மூகாந்திரம் ஏ. எஸ். சங்கரப்பிள்ளையின் மனைவியும், அன்னம்மா, ராஜரட்ணம், ஞானப்பிரகாசம் (லண்டன்) செல்வராஜா பத்மாவதி (அபுதாபி), இராஜேஸ்வரி, பாலச்சந்திரன் ஆகியோரின் தாயாரும், டாக்டர் வைத்தியலிங்கம், மனோன்மணி, வசந்தாதேவி (லண்டன்), பாலசண்முகம் (அபுதாபி), தனபாலசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், சண்முகம் (பரந்தன்), சின்னத்தம்பி (வவுனியா), ஆகியோரின் சகோதரியும், சுபத்திராதேவி, பாலசுந்தரம், சூரியகுமார் (தொழில்நுட்ப நிலையம், வட்டுக்கோட்டை) ஸ்கந்தராஜா (லண்டன்), இன்பராணி (வேம்படி மகளிர் கல்லூரி), ரேவதி (வேம்படி மகளிர் கல்லூரி), நிர்மலா(லண்டன், தர்மஜா (லண்டன்), கவிதா (லண்டன்) ஆகியோரின் பாட்டியுமாவார்.

தகனக்கிரியை இன்று செவ்வாய்க்கிழமை (15-4-80) காலை பத்து மணிக்கு காரைநகர் தில்லை மயானத்தில் நடைபெறும்

உற்றாரும் உறவினரும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்

5475

ST. JOHN'S COLLEGE, JAFFNA.

VOCATIONAL TRAINING INSTITUTE.

Applications are invited for a two year course in Motor Engineering leading to the Diploma in Automobile Engineering and A. M. I. M. I. (London).

Staff: Qualified Lectures trained by Tata Engineering & Locomative Co., and Ashok Leyland (India).

Medium: English & Tamil.

Qualifications: Should be over 16 years and must have passed in atleast four subjects at the G C.E. (O.L.) or N. C G. E. examination with English as one of the four.

FEES: Rs. 400/- per year or Rupees Forty per month. Theory and practical Classes will be conducted at St John's College, between 9 a m. and 4 p m. The Course will commence on the 2nd of June 1980. Applications (in the student's own handwriting) close on 12th May Scholarship will be awarded to deserving students.

PRINCIPAL,
St. John's College, Jaffna.
11th April 1980. 5476

## மரண அறிவித்தல்

### சிவகுரு தையல்நாயகி

காலஞ்சென்ற ஏ. எம். சிவகுருவின் அன்புத்துணைவியார் தையல்நாயகி காலமானார். இவர் காலஞ்சென்ற மகேஸ்வரி விநாசித்தம்பி (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர், யாழ்ப்பாணம்) அவர்களின் தாயாரும், யோகநாதன், யோகேஸ்வரி, (ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி), யோகபூசனி (ஆசிரியை, கனகரத்தினம் மகாவித்தியாலயம்), யோகேஸ்வரன் (சிவில் என்ஜினியர், ஜுவல் ஆர்ட்ஸ், கொழும்பு), ஆகியோரின் பேத்தியும்; சுப்பிரமணியம், காலஞ்சென்ற சிவப்பிரகாசம், நவரத்தினம், கனகரத்தினம், செல்வி காசிப்பிள்ளை, திருமதி சோதிரட்ணம் இராசையா ஆகியோரின் சிறிய தாயாருமாவார். அன்னாரின் பூதவுடல் (15-4-80) இன்று காலை 8-30க்கு தகனக்கிரியைகளுக்காக 53, 2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலிருந்து வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

5480

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில்மேற்கு வீதி63-ம் இலக்க அச்சகத்தில் ஏப்ரல் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
Registered as a News paper at the General Post office Sri Lanka under No. QD/33/News/78 The Eelanaadu, Post Box No. 49, Telegram 'Eelanaadu' Phone: 889

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org